# நடப்பு நிகழ்வுகள் - நவம்பர் 1-30, 2022



| வ.எண். | தலைப்புகள் | பக்க எண். |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு | 3 |
| 2 | மாநிலங்கள் | 10 |
| 3 | தேசிய செய்திகள் | 13 |
| 4 | சர்வதேச செய்திகள் | 17 |
| 5 | இந்தியா மற்றும் இதர நாடுகள் | 20 |
| 6 | திட்டங்கள் | 21 |
| 7 | நீதிமன்ற தீர்ப்புகள் | 21 |
| 8 | மாநாடுகள் மற்றும் உச்சி மாநாடுகள் | 22 |
| 9 | பாதுகாப்பு | 25 |
| 10 | நியமனங்கள் | 28 |
| 11 | விருதுகள் | 29 |
| 12 | புகழ்பெற்ற நபர்கள் | 31 |
| 14 | புத்தகங்களும் ஆசிரியர்களும் | 31 |
| 15 | பொருளாதாரம் | 32 |
| 16 | அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச் சூழல் | 33 |
| 17 | விளையாட்டுகள் | 38 |
| 18 | இரங்கல் செய்திகள் | 40 |
| 19 | அறிக்கைகள் | 41 |
| 20 | தரவரிசைப்பட்டியல் | 44 |
| 21 | முக்கிய தினங்கள் | 45 |
| 22 | மற்றவை | 50 |

# தமிழ்நாடு

- **சதய விழா**

✓ பேரரசர் ராஜ ராஜ சோழனின் பிறந்த நாளான 1,037வது சதய விழா தஞ்சாவூரில் அரசு விழாவாக நவம்பர் 3ஆம் தேதி கொண்டாடப்பட்டது.

✓ முன்னதாக, நவம்பர் 3ஆம் தேதி அனுசரிக்கப்படும் பழம்பெரும் தமிழ் மன்னர் ராஜ ராஜ சோழனின் பிறந்த நாள் இனி அரசு விழாவாகக் கொண்டாடப்படும் என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் நவம்பர் 2ஆம் தேதி அறிவித்தார்.

✓ ராஜராஜ சோழன் அவரது பிறந்த நாள் அன்று முடிசூட்டப்பட்டார் என்பதாலும், அன்றைய நாள் 'சதயம்' நட்சத்திரம் என்பதாலும், அவரது பிறந்த நாளும், முடிசூட்டும் நாளும் ஒன்றாக 'சதய விழா' என்று கொண்டாடப்படுகிறது.

- **செயல்திறன் தரக் குறியீடு (Performance Grading Index)**

✓ தமிழ்நாடு – கல்வி அமைச்சகத்தின்கீழ் உள்ள பள்ளிக் கல்வி மற்றும் எழுத்தறிவுத் துறையால் வெளியிடப்பட்ட செயல்திறன் தரவரிசைக் குறியீட்டில் 2020-21ஆம் ஆண்டில் மூன்றாம் நிலைக்குச் சென்றுள்ளது.

✓ நவம்பர் 3 அன்று வெளியிடப்பட்ட சமீபத்திய தரவரிசையில் சமபங்கு, உள்கட்டமைப்பு மற்றும் நிர்வாகத்தில் மோசமான மதிப்பெண்களை மாநிலம் பெற்றுள்ளது.

✓ சமீபத்திய குறியீட்டின்படி, 2019-20இல், 906 ஆக இருந்த மாநிலத்தின் ஒட்டுமொத்த மதிப்பெண் 2020-21இல் 855 ஆகக் குறைந்துள்ளது.

✓ செயல்திறன் தரவரிசைக் குறியீடானது ஐந்து களங்களில் 70 குறிகாட்டிகளில் 1000 புள்ளிகளைக் கொண்டுள்ளது – கற்றல் முடிவுகள் மற்றும் தரம், அணுகல், உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள், சமபங்கு மற்றும் ஆளுகை செயல்முறை ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

- **விண்வெளி மற்றும் பாதுகாப்புக் கொள்கை (Aerospace and Defence Policy) 2022**

✓ நவம்பர் 8 ஆம் தேதி, சென்னையில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (டிட்கோ) ஏற்பாடு செய்திருந்த தொழில் 4.0 மாநாட்டில் 'எதிர்காலம் இப்போது – உயர்ந்து நிற்கும் தமிழ்நாடு' என்ற திருத்தப்பட்ட தமிழ்நாடு விண்வெளி மற்றும் பாதுகாப்புக் கொள்கை 2022-ஐ முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வெளியிட்டார்.

✓ விண்வெளி மற்றும் பாதுகாப்பு துறைகள் மூலம் அடுத்த 10 ஆண்டுகளில் ரூ.75,000 கோடி மதிப்புள்ள முதலீடுகளை ஈர்க்கவும், சுமார் ஒரு இலட்சம் வேலை வாய்ப்புகளை உருவாக்கவும் தமிழ்நாடு அர'சு திட்டமிட்டுள்ளது.

✓ இரண்டு சிறப்பு மையங்கள் பின்வருமாறு: தமிழ்நாடு ஸ்மார்ட் மற்றும் மேம்பட்ட உற்பத்தி மையம் (TANSAM) மற்றும் தமிழ்நாடு மேம்பட்ட உற்பத்தி சிறப்பு மையம் (TAMCOE)

- **காவிரி தெற்கு வனவிலங்கு சரணாலயம்**

✓ நவம்பர் 8ஆம் தேதி, தமிழக அரசு – காவிரி தெற்கு வனவிலங்கு சரணாலயத்தை, மாநிலத்தின் 17வது வனவிலங்கு சரணாலயமாக அறிவித்தது.

✓ கடந்த ஏப்ரல் 25ஆம் தேதி வெளியிடப்பட்ட அறிவிப்பைத் தொடர்ந்து இதற்கான அறிவிப்பை தமிழக அரசு தற்போது வெளியிட்டுள்ளது.

✓ காவிரி தெற்கு வனவிலங்கு சரணாலயத்தில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள அஞ்செட்டி தாலுகாவும். தர்மபுரி மாவட்டத்தில் உள்ள பென்னாகரம் மற்றும் பாலக்கோடு தாலுக்காக்களும் அடங்கும்.

- ✓ இந்த சரணாலயத்தில் 35 வகையான பாலூட்டிகள் மற்றும் 238 வகையான பறவைகள் உள்ளன.

- ➢ **நூலக நண்பர்கள் (Friends of Library)**
- ✓ பொது நூலக இயக்குநரகம் - டிசம்பர் 2022 முதல் 'நூலக நண்பர்கள்' என்ற ஒரு புதிய திட்டத்தைத் தொடங்க திட்டமிட்டுள்ளது.
- ✓ இந்த முன்முயற்சியின்கீழ், சுமார் 12,500 தன்னார்வலர்கள் மாநிலம் முழுவதும் தங்கள் சுற்றுப்புறங்களில் உள்ள வாடிக்கையாளர்களின் வீட்டு வாசலில் புத்தகங்களை வழங்குவார்கள்.
- ✓ முதியவர்கள், மாற்றுத் திறனாளிகள், இல்லத்தரசிகள், குழந்தைகள் மற்றும் பிறர் தங்கள் வீட்டு வாசலில் புத்தகங்களைப் பெற உதவுவதே இந்த முயற்சியின் நோக்கமாகும்.
- ✓ ஆசிரியர்கள், ஏழாம் வகுப்புக்கு மேல் படிக்கும் பள்ளி மாணவர்கள், சிவில் சர்வீஸ் ஆர்வலர்கள் மற்றும் நூலகத்தின் உறுப்பினர்களும் புத்தகங்களை வழங்குவதற்கு தன்னார்வலர்களாகப் பதிவு செய்து கொள்ளலாம்.

- ➢ **மல்டி மோடல் லாஜிஸ்டிக்ஸ் பூங்கா (Multimodal Logistics Park)**
- ✓ முகேஷ் அம்பானி தலைமையிலான ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் - நாட்டின் முதல் மல்டி மோடல் லாஜிஸ்டிக்ஸ் பூங்காவை சென்னையில் அமைக்க உள்ளது.
- ✓ திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள மப்பேடு என்ற இடத்தில் 184.27 ஏக்கர் பரப்பளவில் இந்த மல்டி மோடல் லாஜிஸ்டிக்ஸ் பூங்கா அமைக்கப்படும்.
- ✓ இந்தத் திட்டத்திற்கான மாதிரி சலுகை ஒப்பந்தம் 'வடிவமைப்பு, உருவாக்கம், நிதி, இயக்குதல் மற்றும் பரிமாற்றம் (Design, Build, Finance, Operate, and Transfer) அடிப்படையில் உள்ளது.
- ✓ மே 26, 2022 அன்று பிரதமர் நரேந்திர மோடி இந்தத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார்.
- ✓ இந்த மல்டி மோடல் லாஜிஸ்டிக்ஸ் பூங்கா சென்னையில், ரூ.783 கோடி டெவலப்பர் முதலீட்டில் மூன்று கட்டங்களாக உருவாக்கப்பட உள்ளது.

- ➢ **முதல் யானை இறப்பு தணிக்கை கட்டமைப்பு (First Elephant Death Audit Framework)**
- ✓ இந்தியாவின் முதல் யானை இறப்பு தணிக்கைக் கட்டமைப்பை தமிழ்நாடு அறிமுகப்படுத்தியுள்ளது.
- ✓ மாநிலத்தில் யானைகள் இறப்பைப் பதிவு செய்வதற்கும் கண்காணிப்பதற்கும் யானை இறப்பு தணிக்கைக் கட்டமைப்பை தமிழ்நாடு அரசின் வனத்துறை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ✓ ஒரு வெளிப்படையான செயல்முறை மூலம் உயர்தரம் மற்றும் நம்பகத் தன்மையுடன் இறப்பு மதிப்பீட்டுத் தரவைச் சேகரிக்க இந்த கட்டமைப்பு உதவியாக இருக்கும்.
- ✓ உலகில் உள்ள ஆசிய யானைகளின் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்கு இந்தியாவில்உள்ளது.

APOLLO STUDY CENTRE

## ➢ கைக்கன் வளவு நீர் திட்டம் (Kaikkan Valavu Water Project)

- ✓ நவம்பர் 21 அன்று, உள்ளாட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு – மாவட்டத்தில் உள்ள கரியக்கோயில் அணையின் மதகுகளைத் தூக்கி கைக்கன் வளவு நீர் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- ✓ கைக்கன் வளவு என்பது கல்ராயன் மலையில் இருந்து உருவாகும் ஒரு வன ஆறு ஆகும்.
- ✓ கைக்கன் வளவு வனத்துறை ஆற்றை கரியகோயில் அணைக்குத் திருப்பிவிட வேண்டும் என விவசாயிகள் மாநில அரசுக்குக் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.
- ✓ இந்தத் திட்டத்தின்படி, மழைக்காலங்களில் கரியகோவில் அணைக்கு வழக்கமான தண்ணீருடன் கூடுதலாக 4.3 டிஎம்சி தண்ணீர் கிடைக்கும்.

## ➢ தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் (National Fisheries Development Board)

- ✓ தஞ்சாவூர் மாவட்டம் - தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் சிறந்த நன்னீர் உள்நாட்டு மீன்வளர்ப்புக்கான விருதைப் பெற்றுள்ளது.
- ✓ நவம்பர் 21ஆம் தேதி டாமன் யூனியன் பிரதேசத்தில் நடைபெற்ற விழாவில், தஞ்சாவூரைச் சேர்ந்த அதிகாரிகள் இந்த விருதைப் பெற்றனர்.
- ✓ தஞ்சாவூர் மீன்வளத்துறை உதவி இயக்குநர் சிவகுமாருக்கு பல்வேறு துறைகளின் உயர் அதிகாரிகள் விருதுகளை வழங்கினர்.

## ➢ சிறப்பாக செயல்படும் மாவட்டங்கள்

- ✓ மயிலாடுதுறை மாவட்டம் - ஒன்றிய அரசின் ஜல் சக்தி அமைச்சகத்தால் அக்டோபர் மாதத்திற்கான ‘சிறப்பாக செயல்படும் மாவட்டங்கள்’ பிரிவில் 3வது இடத்தைப் பிடித்துள்ளது.
- ✓ வீடுகளுக்கு 75 விழுக்காடு குழாய் இணைப்புகளை வழங்கி, ராணிப்பேட்டை மாவட்டமும், 3வது இடத்தைப் பெற்று, ‘உயர் சாதனையாளர்’ என்ற இடத்தைப் பிடித்தது.
- ✓ மேலும், செயல்பாட்டாளர்கள் பிரிவில் கள்ளக்குறிச்சி மாவட்டம் முதலிடம் பிடித்தது.
- ✓ ஜல் ஜீவன் இயக்கமானது, 2024ஆம் ஆண்டுக்குள் நாட்டில் உள்ள ஒவ்வொரு குடும்பமும் செயல்பாட்டு வீட்டுக் குழாய் இணைப்பைக் கொண்டிருக்கும் வகையில், நீர் வழங்கல் உள்கட்டமைப்பிற்கு உதவுதல், மேம்படுத்துதல் மற்றும் எளிமையாக்குதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ➢ தமிழ்நாடு காவல்துறை (சீர்திருத்தங்கள்) விதிகள், 2022

- ✓ தமிழ்நாடு அரசு தமிழ்நாடு காவல்துறை (சீர்திருத்தங்கள்) விதிகள், 2022ஐ அறிவித்துள்ளது.
- ✓ அவை குற்றப்பிரிவு சிஐடியின் ஏடிஜிபியின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ், காவல்துறை புகார் பிரிவுக்கு ஆவண செய்கின்றன.
- ✓ இந்தப் புகார்கள், இந்தச் சட்டத்தின் 13 மற்றும் 16வது பிரிவின்கீழ் மாநில காவல் புகார் ஆணையம் மற்றும் மாவட்ட காவல் புகார் ஆணையத்தால் விசாரணைக்காக பிரிவுக்கு அனுப்பி வைக்கப்படும்.

### ➢ தமிழ்நாட்டின் முதல் பல்லுயிர் பாரம்பரிய தளம் (Biodiversity Heritage Site)

- ✓ மதுரையில் உள்ள அரிட்டாபட்டி தமிழகத்தின் ‘முதல் பல்லுயிர் பாரம்பரிய தளமாக’ அறிவிக்கப்பட்டுள்ளது.
- ✓ மதுரை மாவட்டம் மேலூர் அருகே உள்ள அரிட்டாபட்டி கிராமத்தை பல்லுயிர் பாரம்பரிய தளமாக அறிவிக்க தமிழக அரசு நவம்பர் 22 ஆம் தேதி அரசாணை வெளியிட்டது.
- ✓ உயிரியல் பன்முகத் தன்மை சட்டம், 2002இன் பிரிவு 37இன் கீழ், இந்த கிராமம் பல்லுயிர் பாரம்பரிய தளமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அரிட்டாபட்டி கிராமம் சுமார் 250 பறவை சிற்றினங்களைக் கொண்டு, வளமான உயிரியல் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக அறியப்படுகிறது.
- ✓ இந்த கிராமம் லாகர் பால்கன், ஷாஹீன் பால்கன் மற்றும் போனெல்லியின் கழுகு போன்ற 3 ஊர்வன சிற்றினங்கள் மற்றும் பாங்கோலின்கள், மலைப்பாம்புகள் மற்றும் மெல்லிய லோரிஸ் போன்ற வனவிலங்குகள் ஆகியவற்றின் தாயமாக உள்ளது.
- ✓ மதுரை மாவட்டம் அரிட்டாபட்டி மற்றும் மீனாட்சிபுரம் கிராமங்களில் மொத்தம் 193.215 ஹெக்டேர் பரப்பளவில் இந்தத் தளம் அமைந்துள்ளது.

### ➢ வந்தே பாரத் விரைவு இரயில் சென்னை – மைசூரு சோதனை ஓட்டத்தை முடித்தது

- ✓ கடைசியாக, சென்னைக்கு பிரிமியம் வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரயில் சேவை தொடங்க உள்ளது. சென்னை – மைசூரு இடையேயான சேவையை பெங்களூருவில் பிரதமர் நரேந்திர மோடி, வெள்ளிக்கிழமை தொடங்கி வைக்கிறார்.·. இந்த பிரிமியர் இரயிலின் முதல் ஓட்டம் மைசூரிலிருந்து தொடங்கும்.
- ✓ முதலில் டிரெயின் 18 என்று பெயரிடப்பட்ட வந்தே பாரத் ரயில், சென்னை பெரம்பூரில் உள்ள ஒருங்கிணைந்த இரயில் பெட்டித் தொழிற்சாலையில் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டது.

### ➢ நியாய விலைக் கடைகள் – (PMGKAY)

- ✓ 22,000க்கும் மேற்பட்ட நியாய விலைக் கடை ஊழியர்களுக்கு தலா ரூ.8,360 ஊக்கத் தொகை வழங்கப்படும்.
- ✓ 2020ஆம் ஆண்டின் தொடக்கத்தில் கோவிட் 19 பெருந்தொற்று தொடங்கியதில் இருந்து இலவச அரிசி வழங்குவதற்கான பிரதம மந்திரி கரிப் கல்யான் அன்ன யோஜனா திட்டத்தின்கீழ் உள்ள குடும்ப அட்டைகளுக்கு தலா 0.5 வீதம் தமிழக நியாய வலைக் கடைகளில் பணியாற்றும் 22,469 பணியாளர்கள் ஊக்கத் தொகையைப் பெற உள்ளனர்.
- ✓ வேறு வகையில் கூறுவதானால், சராசரியாக ஒவ்வொரு பணியாளருக்கும் சுமார் 8,360 ரூபாய் ஊக்கத் தொகையாகக் கிடைக்கும்.

### ➢ நான் முதல்வன் திட்டம் - பெருநிறுவனங்கள் மற்றும் தொழில்கள்

- ✓ கல்லூரி மாணவர்களை தொழில்துறை சார்ந்த திறன்களுடன் தயார்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட தமிழக அரசின் ‘நான் முதல்வன்’ திட்டதில் பெருநிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள் மற்றும் வர்த்தக சபைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன.
- ✓ தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்துடன் 53 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன.

- **பிற்பட்ட வகுப்பினருக்கான ஆணையம் மறுசீரமைக்கப்பட்டது**
  - பிற்பட்ட வகுப்பினருக்கான ஆணையம் மறுசீரமைக்கப்பட்டது, ஓய்வுபெற்ற நீதிபதி இதன் தலைவராக நியமிக்கப்பட்டார்.
  - தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தை மறுசீரமைத்தது, அதன் தலைவராக ஓய்வுபெற்ற சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி வி. பாரதிதாசனை நியமித்துள்ளது. ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரிகள் எஸ். கருத்தையா பாண்டியன். எம்.ஃ. ஜெயராமன், ஆர். சுடலை கண்ணன், மற்றும் கே. மேகராஜ், தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் பல்கலைக் கழக முன்னாள் பதிவாளர் பெரு. மதியழகன், திருப்பூர் மாவட்டம் முத்தூரில் உள்ள கருப்பண்ணன் மாரியப்பன் கல்லூரி முதல்வர் எஸ்.பி. சரவணன் ஆகியோர் இதில் உறுப்பினர்களாக உள்ளனர்.

- **வ.உ.சிதம்பரனாரைக் கௌரவிக்கும் வலைத்தளப் பக்கம்**
  - மறைந்த சுதந்திரப் போராட்ட வீரர் கப்பலோட்டிய தமிழகன் வ.உ. சிதம்பரனாரின் 150 வது பிறந்த நாளில் அவரைக் கௌரவிக்கும் வகையில், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், வெள்ளிக்கிழமை அன்று ஒரு சிறப்பு வலைத்தளப் பக்கத்தைத் தொடங்கி வைத்தார்.
  - தமிழ் மெய்நிகர் அகாடமியால் நடத்தப்படும் இணையப் பக்கத்தில் (https://www.tamildigitallibrary.in/voc), அரசு மற்றும் பிற நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட புத்தகங்கள், எபிமேரா, ஆவணப் படங்கள் மற்றும் அரிய புகைப்படங்கள் ஆகியவை இதில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன என்று ஒரு அதிகாரபூர்வ செய்திக் குறிப்பு தெரிவித்துள்ளது.
  - வ.உ.சியின் 150 வது பிறந்த நாளை முன்னிட்டு சிறப்பு நினைவு இதழையும் முதலமைச்சர் வெளியிட்டார்.

- **தணிக்கைத் துறைத் தலைவரின் (Director General of Audit) பொறுப்புகளை உருவாக்கிய முதல் மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது**
  - தணிக்கைத் துறைத் தலைவரின் பொறுப்புகளை உருவாக்கிய முதல் மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது என்றும், இதற்காக இந்திய தணிக்கை மற்றும் கணக்கு சேவை அதிகாரி ஒருவரை அயற்பணியில் நியமித்துள்ளதாகவும் நிதித்துறை செயலாளர் என். முருகானந்தம் புதன்கிழமை அன்று தெரிவித்தார்.
  - உள் தணிக்கைத் துறைகளின் செயல்பாடுகளை வலுப்படுத்துவதும், நெறிப்படுத்துவதும் இந்த அதிகாரியின் பொறுப்பாக இருக்கும் என்றும், இதனால் அவர்கள் தொழில் ரீதியாக தங்கள் பணிகளைச் செய்வார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.
  - உள் தணிக்கையின் முக்கியத்துவத்தை மாநில அரசு அங்கீகரித்துள்ளதுடன், செலவினங்களின் செயல்திறனை மேம்படுத்தும் வகையில் முறையான கட்டுப்பாட்டு வழிமுறைகளைக் கொண்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

- **ஜவுளி நகரம்**
  - சென்னையில், 'ஜவுளி நகரம்' அமைக்கப்படும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.
  - ஜவுளி ஏற்றுமதியை ஊக்குவிக்கும் வகையில் கரூர், திருப்பூர் மற்றும் காஞ்சிபுரத்தில் 'ஏற்றுமதி மையங்கள்' விரைவில் அமைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.
  - அக்டோபர் 25 அன்று மாநில மற்றும் மத்திய அரசுகளின் ஜவுளித் துறைகளுடன் இணைந்த சிஐஐ ஏற்பாடு செய்திருந்த தொழில்நுட்ப ஜவுளி தொடர்பான முதல் சர்வதேச மாநாட்டில் காணொலி காட்சி வாயிலாக உரையாற்றும்போது, இந்தப் புதிய முயற்சிகளை முதல்வர் அறிவித்தார்.

## ➢ TracKD

- ✓ தமிழ்நாடு காவல்துறை டிஜிபி சி. சைலேந்திர பாபு – நவம்பர் 25 அன்று மயிலாப்பூரில் உள்ள காவல்துறை தலைமை அலுவலகத்தில் ‘டிராக் கேடி’ என்ற ஒரு புதிய செயலியை அறிமுகப்படுத்தினார்.
- ✓ இந்த கைப்பேசி செயலி குற்றவாளிகள் மற்றும் ரவுடிகளை நிகழ்நேர அடிப்படையில் கண்காணிக்க காவல்துறையினரால் பிரத்தியேகமாக பயன்படுத்தப்படும்.
- ✓ இந்த செயலியானது, அதிகார வரம்பிற்குட்பட்ட அதிகாரிகளால் பழமையான வரலாற்று தாள் ஆய்வுகளை டிஜிட்டல் மயமாக்குகிறது. இதன்மூலம் மாதாந்திர அடிப்படையில் கண்காணிப்புகளை உறுதி செய்ய முடியும்.
- ✓ கூடுதல் காவல் ஆணையர் பிரேம் ஆனந்த் சின்ஹா தலைமையிலான குழு இந்த செயலியை உருவாக்கியுள்ளது.

## ➢ பொருநை

- ✓ நவம்பர் 26 அன்று, மாநில அரசு திட்டமிட்டுள்ள 5 இலக்கி விழாக்களில் முதலாவதாகிய பொருநையை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் காணொலி காட்சி வாயிலாக திருநெல்வேலியில் தொடங்கி வைத்தார்.
- ✓ இந்த நிகழ்ச்சியின்போது, வைகை, காவிரி, சிறுவாணி, சென்னை என நான்கு இலக்கிய விழாக்களை அரசு நடத்தவுள்ளது என்று முதலமைச்சர் தெரிவித்தார்.
- ✓ திருநெல்வேலி தாமிரபரணி கரையில் நடத்தப்படும் இரண்டு நாள் நிகழ்ச்சியில் எழுத்தாளர்கள் மற்றும் இலக்கியவாதிகளின் சிறப்பு சொற்பொழிவுகள் இடம்பெறும்.
- ✓ தொடக்க விழாவில் கல்பட்டா நாராயணன், வண்ணதாசன், கதை சொல்லி, பாவா செல்லத்துரை போன்ற எழுத்தாளர்கள் சிறப்பு உரையாற்றினர்.

## ➢ விரிவான இயக்கத் திட்டம் (Comprehensive Mobility Plan)

- ✓ சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து ஆணையம் - விரிவான இயக்கத் திட்டத்தில் வழிகாட்டுதலைப் பெறுவதற்காக, ‘லண்டனுக்கான டிரான்ஸ்போர்ட்’ உடன் கூட்டு சேர முடிவு செய்துள்ளது.
- ✓ ஒருங்கிணைந்த போக்குவரத்து ஆணையமான ‘லண்டனுக்கான போக்குவரத்து அமைப்பு’ விரிவான இயக்கத் திட்டத்தை உருவாக்குவதற்கும் பொதுவான டிக்கெட் வசதியை அறிமுகப்படுத்துவதற்கும் தொழில்நுட்ப வழிகாட்டுதலை வழங்கும்.
- ✓ இது அனைத்து போக்குவரத்து முறைகளையும் தடையின்றி ஒருங்கிணைக்கவும், பொது மற்றும் மோட்டார் அல்லாத போக்குவரத்தை ஊக்குவிக்கவும் மற்றும் விரிவான இயக்கத்திட்டத்திற்காக வடிவமைக்கப்பட்ட வேகத்தை மேம்படுத்தவும், சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து ஆணையத்திற்கு உதவி செய்யும்.
- ✓ லண்டனுக்கான போக்குவரத்து. லண்டனில் அனைத்து வகையான போக்குவரத்தையும் நிர்வகிக்கிறது – பேருந்துகள், நிலத்தடி ரயில்கள், டிராம்கள் மற்றும் சாலைகள்.

## ➢ மாற்றுத் திறனாளிகளுக்கான இந்தியாவின் முதல் நிரந்தர சாய்தளம்

- ✓ சென்னை மாநகராட்சி, மெரினா கடற்கரையில் மாற்றுத் திறனாளிகளுக்கான நிரந்தரப் பாதையை நிறைவு செய்துள்ளது.
- ✓ இது ஞாயிற்றுக் கிழமைகளில் திறக்கப்படும். இது குறித்து அதிகாரிகள் கூறியதாவது: விவேகானந்தர் இல்லம் அருகே மெரினா கடற்கரை சர்வீஸ் சாலையில் இருந்து உயர் அலை பாதை வரை 263 மீட்டர் நீளத்துக்கு மரப்பாதை அமைக்கப்பட்டுள்ளது.
- ✓ கடற்கரையில் மாற்றுத் திறனாளிகளுக்காக அமைக்கப்படும் இந்தியாவின் முதல் நிரந்தர சாய்தளப் பாதை இதுவே ஆகும்.

- **STEM (அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் - science, technology, engineering and mathematics)**

✓ நவம்பர் 28 அன்று, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் - அரசுப் பள்ளி மாணவர்களுக்கான நடமாடும் ஸ்டெம் ஆய்வகங்களைத் தொடங்கி வைத்தார்.

✓ அறிவியல் மற்றும் கணிதத்தில் அரசுப் பள்ளி மாணவர்களின் ஆர்வத்தை வளர்ப்பதை ஊக்குவிக்கும் வகையில் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.˙.

✓ இந்த முயற்சியைத் தொடங்கி வைத்து, திருச்சி காட்டூரில் உள்ள ஆதி திராவிடர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில். 100 நடமாடும் ஸ்டெம் ஆய்வகங்களை முதலமைச்சர் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

# மாநில செய்திகள்

➢ **ராணிப்பூர் புலிகள் காப்பகம்**

✓ உத்தரப்பிரதேசத்தின் ராணிப்பூர் புலிகள் காப்பகம் இந்தியாவின் 53வது புலிகள் காப்பகமாக மாறுகிறது.

✓ உத்தரப் பிரதேசம் அதன் நான்காவது புலிகள் காப்பகத்தையும், இந்தியாவின் உத்தரப் பிரதேசம் அதன் நான்காவது புலிகள் காப்பகத்தையும், இந்தியாவின் 53வது புலிகள் காப்பகத்தையும் கொண்டிருக்க உள்ளது.

✓ புலிகள் காப்பகம் 529.36 ச.கி.மீ பரப்பளவில் பரவியுள்ளது. இதில் மையப் பகுதி 230.32 சதுர கி.மீ மற்றும் தாங்கல் பகுதி 299.05 சதுர கி.மீ ஆகும்.

➢ **எனது பூமி (Ente Bhoomi)**

✓ கேரளாவின் 66வது நிறுவன தினத்தை முன்னிட்டு, மாநில வருவாய்த் துறையின் டிஜிட்டல் மறு ஆய்வுத் திட்டமாகிய 'எனது பூமி' என்ற திட்டத்தை முதலமைச்சர் பினராயி விஜயன் தொடங்கி வைத்தார்.

✓ புதிததாகத் தொடங்கப்பட்டுள்ள இந்தத் திட்டம் மாநிலத்தில் மூன்று லட்சத்திற்கும் மேற்பட்ட நிலமற்ற குடும்பங்களைக் கண்டறிந்து அவர்களுக்கு மனைவழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ எனது பூமி என்பது ஒரு இலட்சிய டிஜிட்டல் நில மறு ஆய்வுத் திட்டமாகும். இது நிறைவடைந்தால், நிலமற்ற குடிமக்கள் இல்லாத நாட்டிலேயே முதல் மாநிலமாக இந்த மாநிலத்தை மாற்றும்.

➢ **புதிய ஜிம் கார்பெட் பூங்கா**

✓ உத்தரப் பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் - உத்தரப்பிரதேசத்தின் பிஜ்னோர் மாவட்டத்தில் உருவாக்கப்பட உள்ள 'பதிய ஜிம் கார்பெட் பூங்கா' திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளார்.

✓ இந்தப் பூங்கா உத்தரகாண்டில் உள்ள ஜிம் கார்பெட் பூங்காவுடன் எல்லையைப் பகிர்ந்து கொள்கிறது.

✓ துத்வா, பிலிபித் மற்றும் அமன்கர்க்குப் பிறகு, உத்தரப் பிரதேசத்தின் நான்காவது புலிகள் காப்பகமாக சித்ரகூடில் உள்ள ராணிப்பூர் அறிவிக்கப்பட்டுள்ளது.

✓ ராணிப்பூர் வலவிலங்கு சரணாலயத்திற்கு நாட்டின் 53வது புலிகள் காப்பகம் என்ற அந்தஸ்தை ஒன்றிய அரசு வழங்கியுள்ளது.

✓ 1973ஆம் ஆண்டில் நாட்டில் ஒன்பது புலிகள் காப்பகங்கள் மட்டுமே இருந்தன. அது தற்போது 53 ஆக அதிகரித்துள்ளது.

➢ **2023 இறுதிக்குள் ஒடிசா மாநிலம் சேரிகள் இல்லாத மாநிலமாக மாறும்**

✓ 2023 ஆம் ஆண்டு இறுதிக்குள் ஒடிசாவை குடிசைப் பகுதி இல்லாத மாநிலமாக மாற்றுவதற்காக ஒடிசா அரசு இலக்கு நிர்ணயித்துள்ளதாக முதல்வர் நவீன் பட்நாயக் அறிவித்துள்ளார். ஒடிசா முழுவதும் உள்ள ஐந்து நகராட்சிப் பகுதிகளில் உள்ள குடிசைவாசிகளுக்கு நிலப்பத்திரங்களை வழங்குவதற்கான செயல்முறையை எளிதாக்கும் வகையில் ட்ரோன்களைப் பயன்படுத்தி ஒடிசா முதலமைச்சர் ஒரு கணக்கெடுப்பைத் தொடங்கியுள்ளார்.

✓ ஒடிசாவில் உள்ள அனைத்து சேரிகளும் மாதிரி காலனிகளாக மாற்றப்பட்டு, டிசம்பர் 2023க்குள் ஒடிசா மாநிலம் குடிசைகள் இல்லாத மாநிலமாக மாற்றப்படும்.

## ➢ செழுமையின் சிலை (Statue of Prosperity)

- ✓ பிரதமர் நரேந்திர மோடி நவம்பர் 11, 2022 அன்று பெங்களுருவில் ஸ்ரீநடபிரபு கெம்பேகவுடாவின் 108 அடி உயர வெண்கல சிலையைத் திறந்து வைத்தார்.
- ✓ பெங்களுருவை நிறுவிய நடபிரபு கெம்பேகவுடாவின் பங்களிப்பை நினைவுகூறும் வகையில் இந்த 'செழுமையின் சிலை' நிறுவப்பட்டுள்ளது.
- ✓ ஒற்றுமையின் சிலையை உருவாக்கிய சிற்பி ராம் வி. சுதாரால் இந்த சிலை கருத்துருவாக்கப்பட்டு செதுக்கப்பட்டுள்ளது.
- ✓ இதில் 98 டன் வெண்கலம் மற்றும் 120 டன் எ.்.கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

## ➢ டோன்இ போலோ விமான நிலையம் (Donyi Polo Airport)

- ✓ நவம்பர் 19 அன்று, பிரதமர் நரேந்திர மோடி – அருணாசலப் பிரதேசத்தில் முதல் கிரீன்.்.பீல்டு வசதிகொண்ட புதிய டோனி போலோ விமான நிலையத்தைத் திறந்து வைத்தார்.
- ✓ மாநிலத் தலைநகர் இட்டா நகரில் இருந்து 15 கிமீ தொலைவில் உள்ள ஹோலோங்கியில் இந்த விமான நிலையம் அமைந்துள்ளது.
- ✓ இது எல்லை மாநிலத்தை வணிக விமானங்கள் மற்றும் ஹெலிகாப்டர் சேவைகள் மூலம், மாநிலத்தின் பிற நகரங்கள் மற்றும் இந்தியாவின் இதர நகரங்களுடன் இணைக்கும்.
- ✓ டோன்இ சூரியனையும் போலோ சந்திரனையும் குறிப்பதால், சூரியன் மற்றும் சந்திரன் பெயரிடப்பட்ட நாட்டின் முதலாவது விமான நிலையம் இதுவாகும்.

## ➢ கங்கை நீர் ஆபுர்தி யோஜனா (Ganga Jal Aapurti Yojana)

- ✓ நவம்பர் 27 அன்று, பீகார் முதலமைச்சர் நிதிஷ் குமார் - ராஜ்கிர் நகரில் நாட்டின் முதல் வகையான நீர் வழங்கல் திட்டமாகிய 'கங்கை நீர் ஆபுர்தி யோஜனா'வின் முதல் கட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- ✓ இத்திட்டத்தின் முதல் கட்டத்தில் ராஜ்கிர், புத்த கயா மற்றும் கயா நகரங்களுக்கு தடையில்லாத குடிநீர் விநியோகத்தை உறுதி செய்யும். இவை வறண்ட காலங்களில் குடிநீர் ஆதாரத்திற்காக அருகிலுள்ள மாவட்டங்களில் இருந்து வரும் டேங்கர்களையே நீண்ட காலமாக நம்பியிருக்கின்றன.
- ✓ பிரபல சுற்றுலாத் தளங்களான ராஜ்கிர், கயா மற்றும் புத்த கயா ஆகியவை கூட்டாக 'பௌத்த சுற்றுகள்' என்று அழைக்கப்படுகின்றன.
- ✓ ஜல் ஜீவன் ஹரியாலி திட்டத்தின்கீழ் தொடங்கப்பட்ட திட்டம், முதலமைச்சரின் 'கனவுத் திட்டம்' ஆகும்.
- ✓ இது பீகாரின் முதல் மற்றும் மிகப்பெரிய குடிநீர் திட்டமாகும்.

## ➢ UNESCO பாரம்பரிய விருதுகள்

- ✓ ஐதராபாத்தில் உள்ள குதுப் ஷாஹி கல்லறை வளாகத்தில் உள்ள 17ஆம் நூற்றாண்டின் படிக்கட்டுக் கிணறுகளை மீட்டமைத்ததற்காகவும், 18ஆம் நூற்றாண்டில் காமரெட்டி மாவட்டத்தில் தோமகொண்டா கோட்டையில் கட்டப்பட்ட பாதுகாப்புப் பணிகளுக்காகவும், யுனெஸ்கோவின் ஆசிய பசிபிக் விருதுகளில், கலாச்சார பாரம்பரியப் பாதுகாப்புக்காக தெலுங்கானா மாநிலம் இரட்டை வெற்றியைப் பெற்றது.
- ✓ இந்த விருதுகள் சனிக்கிழமை பாங்காக்கில் அறிவிக்கப்பட்டன.

- **யுனெஸ்கோ ஆசிய பசிபிக் விருதுகள் - கலாச்சார பாரம்பரிய பாதுகாப்பு**

- ✓ மும்பையில் உள்ள 100 ஆண்டுகள் பழமையான சத்ரபதி சிவாஜி மகாராஜ் வாஸ்து சங்க்ரஹாலயாவின் மறுசீரமைப்பு, இந்த ஆண்டு யுனெஸ்கோவின் கலாச்சார பாரம்பரியப் பாதுகாப்பிற்கான ஆசிய பசிபிக் விருதுகளில் 'சிறப்பான விருதை' வென்றுள்ளது.
- ✓ இந்த அருங்காட்சியகம் மும்பையின் உலக பாரம்பரிய சொத்தின் விக்டோரியன் கோதிக் மற்றும் ஆர்ட் டெகோ குழுமங்களின் ஒரு பகுதியாகும்.

APOLLO STUDY CENTRE

# தேசிய செய்திகள்

## ➢ அகாடமிக் பாங்க் ஆப் கிரெடிட் (Academic Bank of Credit)

- ✓ பல்கலைக் கழக மானியக் குழு – ஆன்லைன், திறந்தநிலை மற்றும் தொலைதூரக் கற்றல் முறையின்கீழ் பாடத் திட்டங்களை வழங்கும் நிறுவனங்கள், கல்வி வங்கியில் (Academic Bank of Credit) மாணவர்களைப் பதிவு செய்வதைக் கட்டாயமாக்கியுள்ளது.
- ✓ அதன்படி, ஆன்லைன் கல்வியை வழங்கும் 58 உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் தொலைதூர முறையில் தங்கள் பாடத் திட்டங்களை வழங்கும் 86 உயர் கல்வி நிறுவனங்கள் கல்வி வங்கி விதிகளுக்கு இணங்க வேண்டும்.
- ✓ இந்த ஆண்டு பல பல்கலைக் கழகங்கள் ஏபிசி போர்ட்டலைக் கட்டாயமாக்கியுள்ளன.

## ➢ பாரதிய பாஷா திவாஸ் (Bharatiya Bhasha Divas)

- ✓ பல்கலைக் கழக மானியக் குழு – அனைத்து உயர் கல்வி நிறுவனஙகளையும் டிசம்பர் 11ஆம் தேதி அன்று, 'பாரதிய பாஷா திவாஸ்'ஐ அனுசரிக்க அறிவுறுத்தியுள்ளது.
- ✓ கல்வி அமைச்சகத்தின், பாரதிய பாஷா சமிதி, அந்த நாளை பாரதிய பாஷா திவாஸாகக் கடைபிடிக்க பரிந்துரை செய்துள்ளது.
- ✓ நவீன தமிழ்க் கவிதையின் முன்னோடியான கவிஞர் சுப்பிரமணிய பாரதியின் பிறந்த நாளைக் குறிக்கும் நாளான டிசம்பர் 11ஆம் தேதியை 'பாதிய பாஷா திவாஸ்' அல்லது 'பாரதிய பாஷா உத்சவ்' ஆகக் கொண்டாட முன்மொழியப்பட்டது.

## ➢ கங்கா உத்சவ் 2022

- ✓ கங்கா உத்சவ் 2022 – நதி திருவிழா நவம்பர் 4 ஆம் தேதி கொண்டாடப்படும்.
- ✓ கங்கா உத்சவ் - நதி திருவிழாக்கள் 2022 தூய்மையான கங்கைக்கான தேசியப் பணி, நீர்வளங்கள். நதி மேம்பாடு மற்றும் கங்கை புத்துயிர் துறை மற்றம் ஜல்சக்தி அமைச்சகம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## ➢ நிவேஷக் திதி (Niveshak Didi)

- ✓ இந்தியா போஸ்ட் பேமெண்ட்ஸ் வங்கிகள் - ஸ்ரீநகரின் தால் ஏரியில் 'நிவேஷக் திதி' திட்டத்தின்கீழ் இந்தியாவின் முதல் மிதக்கும் கல்வியறிவு முகாமை நடத்தியது.
- ✓ இந்தத் தனித்துவமான முயற்சியைப் பாராட்டிய பிரதமர் நரேந்திர மோடி, பெண்களிடையே நிதி கல்வியறிவை மேம்படுத்தும் முகாமான 'நிவேஷக் திதி'யை பாராட்டினார்.
- ✓ இந்தியா போஸ்ட் பேமெண்ட்ஸ் வங்கிகள் நவம்பர் 5 அன்று ஜம்மு காஷ்மீர் மாநிலம் ஸ்ரீநகரில் 'பெண்களால் பெண்களுக்காக' நிதி கல்வியறிவை மேம்படுத்துவதற்காக மிதக்கும் முகாமை நடத்தியது.
- ✓ பெருநிறுவன விவகார அமைச்சகத்தின்கீழ் முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையத்தின் ஒத்துழைப்புடன் இந்தியா போஸ்ட் பேமெண்ட் வங்கி இந்த முயற்சியைத் தொடங்கியுள்ளது.

## ➢ இந்திய உயிரியல் தரவு மையம் (Indian Biological Data Center)

- ✓ ஒன்றிய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை இணை அமைச்சர் ஜிதேந்திர சிங் - இந்தியாவின் முதல் தேசிய உயிர் அறிவியல் தரவுக் களஞ்சியமான 'இந்திய உயிரியல் தரவு மையம்' ஐ சமீபத்தில் நவம்பர் 10 அன்று நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

- ✓ இந்த இந்திய உயிரியல் தரவு மையம், இந்தியாவில் பொது நிதியுதவி ஆராய்ச்சியிலிருந்த உருவாக்கப்பட்ட அனைத்து வாழ்க்கை அறிவியல் தரவுகளையும் காப்பகப்படுத்துவதற்காக அமைக்கப்பட்டது.
- ✓ தரவுகள் இரண்டு தரவு போர்ட்டல்களில் ஹோஸ்ட் செய்யப்படும். அவை ‘இந்திய நியூக்ளியோடைடு தரவுக் காப்பகம்’ (Indian Nucleotide Data Archive) மற்றும் ‘இந்திய நியூக்ளியோடைடு தரவுக் காப்பகம் - கட்டுப்படுத்தப்பட்ட அணுகல்’ (Indian Nucleotide Data Archive - Controlled Access) ஆகும்.

## ➢ காசி தமிழ் சங்கமம்

- ✓ ஒரு மாத கால காசி தமிழ் சங்கமம் நிகழ்ச்சி வாரணாசியில் தொடங்குகிறது.
- ✓ ஒரு மாத காலம் நடைபெறும் காசி தமிழ் சங்கமம் நிகழ்ச்சி நவம்பர் 17, 2022 அன்று வாரணாசியில் தொடங்கியது.
- ✓ சுத்நதிர தின அமிர்தப் பெருவிழாவின் ஒரு பகுதியாக இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- ✓ இந்த சங்கம் நவம்பர் 17, 2022 முதல் டிசம்பர் 16, 2022 வரை நடத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளது.
- ✓ இந்த நிகழ்ச்சியை இந்திய அரசின் கல்வி அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ளது. பனாரஸ் இந்து பல்கலைக் கழகம் நிகழ்ச்சியை நடத்தும் நிறுவனமாகும்.

## ➢ டிஜிட்டல் சக்தி பிரச்சாரம்

- ✓ தேசிய மகளிர் ஆணையம் - டிஜிட்டல் சக்தி பிரச்சாரத்தின் நான்காவது கட்டத்தை சமீபத்தில் நவம்பர் 15 அன்று தொடங்கியது.
- ✓ இந்தப் பிரச்சாரம் பெண்கள் மற்றும் சிறுமிகளை டிஜிட்டல் முறையில் மேம்படுத்துதல் மற்றும் உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ✓ டிஜிட்டல் சக்தி 4.0 ஆனது பெண்களை டிஜிட்டல் திறன் கொண்டவர்களாக ஆக்குவதில் கவனம் செலுத்துகிறது மற்றும் ஆன்லைனில் எந்தவொரு சட்டவிரோத – பொருத்தமற்ற செயலையும் எதிர்த்து நிற்க அவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது.
- ✓ சைபர் பீஸ் அறக்கட்டளை மற்றும் மெட்டாவுடன் இணைந்து தேசிய மகளிர் ஆணையம் இந்தப் பிரச்சாரத்தைத் தொடங்கியது.

## ➢ பசுமைத் துறைமுகம் மற்றும் கப்பல் போக்குவரத்துக்கான தேசிய சிறப்பு மையம் (National Centre of Excellence for Green Port and Shipping)

- ✓ ஒன்றிய துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சர் சர்பானந்தா சோனோவால் - பசுமை துறைமுகம் மற்றும் கப்பல் போக்குவரத்துக்கான இந்தியாவின் முதல் தேசிய சிறப்பு மையத்தை அறிவித்தார்.
- ✓ இது பசுமையான தீர்வுகளை நோக்கிய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சகத்தின் ஒரு முக்கிய முயற்சியாகும்.
- ✓ தேசிய சிறப்பு மையம் (), இந்தியாவில் கப்பல் துறையில் கார்பன் நியூட்ராலிட்டி மற்றும் சர்குலர் எகானமியை அதிகரிக்க, பசுமைக் கப்பலுக்கான ஒழுங்குமுறை கட்டமைப்பையும் மாற்று தொழில்நுட்பத்தை ஏற்றுக் கொள்ளும் சாலை வரைபடத்தையும் உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ➢ ஒரே நிறுத்தக் கடைகள் (One-Stop Shops)

- ✓ ஒன்றிய அரசு – ஏறத்தாழ 2.5 இலட்சம் நியாய விலைக் கடைகள் அல்லது ரேஷன் கடைகளை ‘ஒரே நிறுத்தக் கடைகளாக’ மேம்படுத்துவதற்கு அடையாளம் கண்டுள்ளது.

- ✓ இந்த ஒரே நிறுத்தக் கடைகள் பல்வேறு பயன்பாட்டு கட்டணங்களைச் செலுத்துதல் மற்றும் பான் விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல் போன்ற மின்-சேவைகள் போன்ற பல்வேறு சேவைகளை உள்ளடக்கியதாக இருக்கும்.
- ✓ இதுவரை அத்தகைய 39,000 கடைகள் பொதுவான சேவை மையங்களாக மாற்றப்பட்டுள்ளன.
- ✓ இந்தக் வுட்டத்தில், இந்த விற்பனை நிலையங்களை மாற்றுவதற்கான சிறந்த நடைமுறைகள் குறித்து தமிழக அரசு விளக்கத்தைக் காட்சியப்படுத்தியது.

## ➢ இந்தியாவின் முதல் தற்கொலை தடுப்புக் கொள்கை

- ✓ 2030ஆம் ஆண்டுக்குள் தற்கொலை இறப்பை 10 விழுக்காடு குறைப்பதற்கான காலக்கெடு செயல் திட்டங்கள் மற்றும் பல துறைகளின் ஒத்துழைப்புடன், நாட்டிலேயே முதல்முறையாக தேசிய தற்கொலை தடுப்பு உத்தியை சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் திங்களன்று அறிவித்தது.
- ✓ அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் தற்கொலைக்கான பயனுள்ள கண்காணிப்பு வழிமுறைகளை நிறுவவும், அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட மனநலத் திட்டத்தின்மூலம் தற்கொலை தடுப்புச் சேவைகளை வழங்கும் மனநல வெளிநோயாளிகள் பிரிவுகளை நிறுவவும், அடுத்த எட்டு ஆண்டுகளில் அனைத்து கல்வி நிறுவனங்களிலும் மனநலப் பாடத்திட்டத்தை ஒருங்கிணைக்கவும் இந்த உத்தி பரவலாக முயல்கிறது.

## ➢ அரசியலமைப்பை உருவாக்குவதில் பெண்களின் பங்கு

- ✓ உச்ச நீதிமன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட அரசியலமைப்பு தினக் கொண்டாட்டத்தில், அரசியல் நிர்ணய சபையில் 15 உறுப்பினர்கள் பெண்கள் என்று திரு. மோடி கூறினார்.
- ✓ அவர்களில் ஒருவரான, தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த தாக்ஷாயினி வேலாயுதன், ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க முக்கியமான நடவடிக்கைகளை மேற்கொண்டார். துர்காபாய் தேஷ்முக், ஹன்சா மேத்தா, ராஜ்குமாரி அமிர்த கவுர் மற்றும் பிற பெண் உறுப்பினர்களும் பெண்கள் தொடர்பான தலைப்புகளில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளனர் என்று திரு. மோடி கூறினார்.

## ➢ நை சேத்னா (Nai Chetna)

- ✓ தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் ‘நை சேத்னா’ பாலின பிரச்சாரம் - பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்பதற்கான சர்வதேச தினத்தை முன்னிட்டு நவம்பர் 25 அன்று தொடங்கப்பட்டது.
- ✓ இந்த நாடு தழுவிய பிரச்சாரம், பாலி அடிப்படையிலான வன்முறை நிலவுவதை பெண்கள் ஏற்றுக் கொள்வதற்கும், அதற்கு எதிராக குரல் எழுப்புவதற்கு அவர்களைத் தயார்படுத்துவதற்கும், அவர்களின் உரிமைகள் பற்றிய அறிவை அவர்களுக்கு வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ✓ இந்தப் பிரச்சாரத்தின் ஒரு பகுதியான செயல்பாடுகள், பாலின சமத்துவம் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறை அடிப்படையிலானதாக இருக்கும்.

## ➢ கார்பன் பிடிப்பு, பயன்பாடு மற்றும் சேமிப்பு (Carbon Capture Utilisation and Storage)

- ✓ நித்தி ஆயோக் அமைப்பு, தொழில்துறை உமிழ்வை டிகார்பனைஸ் செய்ய முன்மொழிகிறது.
- ✓ எ∴கு, சிமெண்ட், எண்ணெய், எரிவாயு, பெட்ரோ கெமிக்கல்கள், இரசாயணங்கள் மற்றும் உரங்கள் போன்ற உயர் மாசுபடுத்தும் துறைகளிலிருந்து உமிழ்வை நீக்குவதற்கான தொழில்நுட்பமான கார்பன் பிடிப்பு, பயன்பாடு மற்றும் சேமிப்பகம், 2050ஆம் ஆண்டுக்குள்

நாட்டின் கார்பன் டை ஆக்சைடு வெளியேற்றத்தை பாதியாகக் குறைக்க முக்கிய பங்கு வகிக்கிறது. இதை நித்தி ஆயோக் மற்றும் எம்என் தஸ்தூர் மற்றும் கம்பெனி நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட கார்பன் பிடிப்பு, பயன்பாடு மற்றும் சேமிப்பகத்தின் கொள்கை கூட்டமைப்பின் அறிக்கை கூறுகிறது.

# சர்வதேச செய்திகள்

➢ **கருங்கடல் தானிய ஒப்பந்தம்**

✓ கருங்கடல் தானிய ஒப்பந்தம் - இந்தத் திட்டத்தில் பங்கேற்பதை நிறுத்தி வைக்க ரஷ்யா முடிவு செய்திருந்தபோதிலும், ஐக்கிய நாடுகள் சபையால் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

✓ கருங்கடல் தானிய ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக அக்டோபர் 31 அன்று உக்ரேனிய துறைமுகங்களை விட்டு வெளியேறிய கப்பல்களில் 354,500 டன் விவசாய பொருட்கள் கொண்டு செல்லப்பட்டன.

✓ இந்த ஒப்பந்தத்தை தரகு செய்ய உதவிய துருக்கி, இஸ்தான்புல்லில் உள்ள கூட்டு ஒருங்கிணைப்பு மையத்தில் சரக்குகளை ஆய்வ செய்வது உட்பட, இந்த ஒப்பந்தத்தில் உறுதியாக இருந்தது.

➢ **பெர்மாக்ரிசிஸ் (Permacrisis)**

✓ நவம்பர் 1ஆம் தேதி, ‘பெர்மாக்ரிசிஸ்’ என்ற வார்த்தையானது, மோசமான 2022ஐ அங்கீகரிக்கும் வகையில் பிரிட்டனின் இந்த ஆண்டின் சிறந்த வார்த்தையாக தேர்வு செய்யப்பட்டது.

✓ காலின்ஸ் அகராதியால் தொகுக்கப்பட்ட வருடாந்திர பட்டியல், இந்த வார்த்தையை ‘நிலையற்ற தன்மை மற்றும் பாதுகாப்பின்மையின் நீட்டிக்கப்பட்ட காலம்’ என்று வரையறுத்துள்ளது.

✓ பிரெக்சிட், கோவிட் பெருந்தொற்று, தீவிர வானிலை, உக்ரைன் மோதல், அரசியல் அமைதியின்மை மற்றும் வாழ்க்கைச் செலவுப் பிரச்சினை ஆகியவற்றின் விளைவாக, ‘பெர்மாக்ரிசிஸ்’ என்ற வார்த்தை பரவலாகப் பயன்படுத்தப்பட்டது.

✓ “Kyiv,” “sportswashing,” மற்றும் “partygate” போன்ற வார்த்தைகளைவிட ‘permacrisis’ என்ற வார்த்தை அதிக அளவில் பயன்படுத்தப்பட்டதாகத் தேர்வு செய்யப்பட்டது.

➢ **தென்னாப்பிரிக்காவின் மன்னர்**

✓ Misuzulu ka Zwelithini – டர்பனில் உள்ள கால்பந்து மைதானத்தில் தென்னாப்பிரிக்காவின் மன்னராக முடிசூட்டப்பட்டார்.

✓ நாட்டின் பணக்கார மற்றும் மிகவும் செல்வாக்கு மிக்க பாரம்பரிய முடியாட்சியின் புதிய ஆட்சியாளராக அவரை அங்கீகரித்து, அக்டோபர் 30 அன்று அதிபர் சிரில் ரைம்போசா மிசுலு ஜூலுவிடம் சான்றிதழை அதிகாரப்பூர்வமாக ஒப்படைத்தார்.

✓ 1971ஆம் ஆண்டுக்குப் பிறகு முதன் முறையாக ஜூலு அரசர் ஒருவர் நாட்டின் அரசால் முடி சூட்டப்பட்டார்.

➢ **மிக நீளமான பயணிகள் இரயில்**

✓ சுவிட்சர்லாந்து. உலகின் மிக நீளமான பயணிகள் ரயிலை இயக்கி சாதனை படைத்தது.

✓ சுவிட்சர்லாந்து இப்போது உலகின் மிக நீளமான பயணிகள் இரயிலின் தாயகமாக உள்ளது.

✓ 1910 மீட்டர் நீளம் கொண்ட இந்த இரயிலில் 100 பெட்டிகள், மற்றும் 4,550 இருக்கைகள் உள்ளன.

✓ சுவிட்சர்லாந்தின் ஆல்ப்ஸ் மலைப்பகுதி வழியாக இந்த ரயில் செல்வது கண்டறியப்பட்டது.

- ✓ சுவிட்சர்லாந்தின் முதல் ரயில்வேயின் 175வது ஆண்ட நிறைவைக் கொண்டாடும் வகையில் அந்த நாட்டின் ரயில்வே ஆபரேட்டர்கள் ஒன்றிணைந்து புதிய கின்னஸ் சாதனையை உருவாக்கியுள்ளனர்.

**➢ பெல்ஜியம்**

- ✓ நவம்பர் 7 அன்று – வளரும் நாடுகளுக்கு பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் சேதம் மற்றும் இழப்புகளைச் சமாளிக்க நிதியுதவி அளித்த உலகின் மூன்றாவது நாடாக பெல்ஜியம் மாறியது.
- ✓ பெல்ஜியம் 2023 முதல் 2028 வரை மொசாம்பிற்கு ஆதரவாக 2.5 மில்லியன் யூரோவை (2.5 மில்லியன் டாலர்கள்) வழங்க உறுதியளித்துள்ளது.
- ✓ முன்னதாக, காலநிலை தொடர்பான இழப்பு மற்றும் சேதங்களுக்கு நிதியுதவி அளிப்பதாக ஸ்காட்லாந்து மற்றும் டென்மார்க் ஆகியவை உறுதியளித்தன.

**➢ நீண்ட கால – குறைந்த உமிழ்வு மேம்பாட்டு உத்தி (Long-Term Low Emission Development Strategy)**

- ✓ நவம்பர் 14 அன்று, இந்தியா – தனத நீண்ட கால குறைந்த உமிழ்வு மேம்பாட்டு உத்தியை ஐ.நா. காலநிலை அமைப்பிடம் சமர்ப்பித்தது.
- ✓ 2070ஆம் ஆண்டின் 'நிகர பூஜ்ஜிய' உமிழ்வு இலக்கை நாடு எவ்வாறு சந்திக்கப் போகிறது என்பதற்கான வரைபடத்தை இந்த மூலோபாயம் வரையறுக்கிறது.
- ✓ பாரிஸ் ஒப்பந்தத்தின்கீழ் அனைத்து நாடுகளுக்கும் தேவைப்படும் இந்த சமர்ப்பிப்பை செய்யும் 57வது நாடாக இந்தியா மாறி'யுள்ளது.
- ✓ நீண்ட கால – குறைந்த உமிழ்வு மேம்பாட்டு உத்தியின் கீழ், நாடுகள் தங்களுக்குரிய காலநிலை நடவடிக்கை இலக்குகளை எவ்வாறு அடையத் திட்டமிட்டுள்ளன என்பதை விளக்கும் வகையில் அவற்றின் திட்டத்தையும் தொலைநோக்குப் பார்வையையும் பரந்த அளவில் கோடிட்டுக் காட்ட வேண்டும்.

**➢ உலகளாவிய கவசம் (Global Shield)**

- ✓ காலநிலை பேரிடர் உதவித் திட்டமாகிய 'குளோபல் ஷீல்டு' COP27 இல் தொடங்கப்பட்டது.
- ✓ காலநிலைப் பேரழிவுகளால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு நிதியுதவி வழங்க ஜி7 தலையில் உருவாக்கப்பட்ட 'உலகளாவிய கவசம்' திட்டம், எகிப்தின் ஷார்ம் எல்ஷேக்கில் உள்ள ஐக்கிய நாடுகளின் காப்27 உச்சி மாநாட்டில் தொடங்கப்பட்டது.
- ✓ இது காலநிலை பாதிப்பால் பாதிக்கப்படும் 58 பொருளாதார நாடுகளைக் கொண்ட 'வி20' குழுவுடன் இணைந்து உருவாக்கப்படுகிறது.
- ✓ இந்த முயற்சியின்கீழ் நிதியுதவி பெறும் முதல் நாடுகளாக பாகிஸ்தான், கானா மற்றும் பங்களாதேஷ் ஆகியவை விளங்குகின்றன.

**➢ காலநிலை அபாயங்களுக்கு எதிரான உலகளாவிய கவசம்**

- ✓ நவம்பர் 14 அன்று, எகிப்தின் ஷர்ம் எல் ஷேக்கில் நடைபெற்ற 2022 ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்ற மாநாட்டில் (காப் 27) 'காலநிலை அபாயங்களுக்கு எதிரான உலகளாவிய கவசம்' என்ற புதிய முயற்சி வெளியிடப்பட்டது.
- ✓ காலநிலைப் பேரழிவுகளின்போது முன்கூட்டியே ஏற்பாடு செய்யப்பட்ட நிதி உதவியை விரைவாக வழங்குவதை இந்தப் புதிய முயற்சி நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ✓ வாழ்வாதாரப் பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பு அமைப்புகள், கால்நடைகள் மற்றும் பயிர்க்காப்பீடு, சொத்துக் காப்பீடு, வணிகத் தடங்கல் காப்பீடு, இடர்-பகிர்வு

நெட்வொர்க்குகள் மற்றும் கடன் உத்தரவாதங்களை உறுதி செய்வதில் இந்த முயற்சி தொடர்புடைய நாடுகளுக்கு ஆதரவு அளிக்கும்.

- **செயற்கை நுண்ணறிவுக்கான உலகளாவிய கூட்டாண்மை (Global Partnership on Artificial Intelligence)**

- ✓ நவம்பர் 21 அன்று இந்தியா – 2022-23 ஆம் ஆண்டிற்கான செயற்கை நுண்ணறிவுக்கான உலகளாவிய கூட்டாண்மையின் தலைமைப் பொறுப்பை ஏற்கிறது.
- ✓ செயற்கை நுண்ணறிவுக்கான வருடாந்திர உலகளாவிய கூட்டாண்மை உச்சி மாநாட்டின் மூன்றாவது பதிப்பு நவம்பர் 21 அன்று டோக்கியோவில் தொடங்கியது.
- ✓ டோக்கியோவில் நடைபெறும் செயற்கை நுண்ணறிவுக்கான உலகளாவிய கூட்டாண்மை கூட்டத்தில், பிரான்சில் இருந்து மாற்றப்படும் தலைவர் பதவியை ஏற்றுக் கொள்வதற்காக. நமது நாட்டின் சார்பில் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் ராஜீவ் சந்திரசேகர் கலந்து கொள்கிறார்.
- ✓ இந்தியா, ஜுன் 15, 2020 அன்று இந்த அமைப்பில் நிறுவன உறுப்பினராகச் சேர்ந்தது.

- **உலக ஆண்டிமைக்ரோபியல் விழிப்புணர்வு வாரம்**

- ✓ நுண்ணுயிர் எதிர்ப்பி தடை பல் பங்குதாரர் கூட்டாண்மை தளம் (The Antimicrobial Resistance (AMR) Multi-Stakeholder Partnership Platform) – நவம்பர் 18 அன்று உலக நுண்ணுயிர் எதிர்ப்பி விழிப்புணர்வு வாரத்தின் தொடக்கத்தைக் குறிக்கும் வகையில் சமீபத்தில் தொடங்கப்பட்டது.
- ✓ பாக்டீரியா, வைரஸ்கள், பூஞ்சைகள் மற்றும் ஒட்டுண்ணிகள் நுண்ணுயிர் எதிர்ப்புகளுக்கு பதிலளிக்காதபோது நுண்ணுயிர் எதிர்ப்பி தடை (Antimicrobial Resistance) ஏற்படுகிறது.
- ✓ நுண்ணுயிர் எதிர்ப்பி தடையின் விளைவாக, நுண்ணுயிர் எதிர்ப்பிகள் மற்றும் பிற நுண்ணுயிர் எதிர்ப்பிகள் பயனற்றவையாகின்றன மற்றும் நோய்த் தொற்றுகளுக்கு சிகிச்சையளிப்பது கடினமான அல்லது சாத்தியமற்றது ஆகிறது. இதனால் நோய் பரவுதல், கடுமையான நோய் மற்றும் இறப்பிற்கான ஆபத்து அதிகரிக்கிறது.
- ✓ நுண்ணுயிர் எதிர்ப்பி தடை பற்றிய உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் அதை நிவர்த்தி செய்வதற்கான சிறந்த நடைமுறைகளை முன்னிலைப்படுத்தவும் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 18 முதல் 24 வரை உலக நுண்ணுயிர் எதிர்ப்பு விழிப்புணர்வு வாரம் அனுசரிக்கப்படுகிறது.
- ✓ இந்த வாரத்தின் கருப் பொருள் 'நுண்ணுயிர் எதிர்ப்பித் தடையை ஒன்றாகத் தடுத்தல்' (Preventing Antimicrobial Resistance Together) என்பதாகும்.

# இந்தியா மற்றும் இதர நாடுகள்

➢ **இங்கிலாந்து - இந்தியா இளம் வல்லுநர்கள் திட்டம்**

✓ நவம்பர் 16 அன்று, இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக் மற்றும் பிரதமர் நரேந்திர மோடி - இந்தோனேசியாவில் ஜி20 உச்சி மாநாட்டில் ஒரு புதிய தொழில்முறை மற்றும் கலாச்சார பரிமாற்ற திட்டத்தை ஒப்புக் கொண்டனர்.

✓ தங்களது சந்திப்பைத் தொடர்ந்து இரு தலைவர்களும், புதிய இங்கிலாந்து - இந்தியா இளம் வல்லுநர்கள் திட்டத்தை உறுதி செய்தனர்.

✓ இந்தத் திட்டத்தின்கீழ், 18-30 வயதுக்குட்பட்ட பட்டப்படிப்பு படித்த இந்திய குடிமக்கள், இரண்டு ஆண்டுகள் வரை வாழவும் வேலை செய்யவும் இங்கிலாந்துக்கு செல்வதற்காக ஆண்டுதோறும் 3000 இடங்களை இங்கிலாந்து வழங்கும்.

✓ 2023ஆம் ஆண்டின் தொடங்கத்தில் தொடங்கப்படும் இந்தத் திட்டம் இரண்டு நாடுகளிலும் பரஸ்பரமாகச் செயல்படுத்தப்படும்.

➢ **இந்தியா – ஆஸ்திரேலியா பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வர்த்தக ஒப்பந்தம் (India-Australia Economic Cooperation and Trade Agreement)**

✓ ஆஸ்திரேலிய பாராளுமன்றம் - இந்தியா – ஆஸ்திரேலிய பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வர்த்தக ஒப்பந்தத்திற்கு ஏப்ரல் 2 அன்று அங்கீகாரம் வழங்கியது.

✓ இதை ஆஸ்திரேலிய பிரதமர் அந்தோனி அல்பானீஸ் தனது அதிகாரப்பூர்வ ட்விட்டர் பக்கத்தில் நவம்பர் 22 அன்று அறிவித்தார்.

✓ தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வர்த்தக ஒப்பந்தம் ஆகியவை செயல்படுத்தப்படுவதற்கு முன் ஆஸ்திரேலிய பாராளுமன்றத்தின் ஒப்புதல் தேவைப்படுகிறது.

✓ ஆஸ்திரேலிய பாராளுமன்றத்தின் ஒப்புதலானது பரஸ்பரம் ஒப்புக் கொள்ளப்பட்ட தேதியில் ஒப்பந்தத்தை வெளியிட வழிவகுக்கிறது.

✓ இந்த ஒப்பந்தம் ஜனவரி 2023 முதல் அமலுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

➢ **மாலியில் பல்பரிமாண ஒருங்கிணைந்த உறுதிப்படுத்துதல் இயக்கம் (Multidimensional Integrated Stabilisation Mission in Mali)**

✓ இந்தியா – மாலியில் உள்ள ஐ.நா அமைதி காக்கும் நடவடிக்கைகளுக்கு ஹெலிகாப்டர் பிரிவை அனுப்பும். இது மாலியில் பல்பரிமாண ஒருங்கிணைந்த உறுதிப்படுத்துதல் பணி என்று அழைக்கப்படுகிறது.

✓ இந்தியாவின் அண்டை நாடுகளான பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் தலா ஒரு ஆயுதம் தாங்கிய ஹெலிகாப்டர் பிரிவை இந்த நடவடிக்கைக்காக அனுப்பும்.

✓ இஸ்லாமிய பயங்கரவாதிகளுடன் அரசு போரிட்டு வரும் நிலையில், பல நாடுகள் மாலியில் பல்பரிமாண ஒருங்கிணைந்த உறுதிப்படுத்துதல் இயக்கத்திலிருந்து பின்வாங்கும் அல்லது பின்வாங்குவதற்கான திட்டங்களை அறிவித்துள்ளதால் மாலி நெருக்கடியை எதிர்கொள்கிறது.

# திட்டங்கள்

- **சுகம் தீர்த்தம்**

✓ மதத் தலங்களுக்குச் செல்லும் மாற்றுத் திறனாளி சுற்றுலாப் பயணிகளுக்கு 'சுகம் தீர்த்தம்' என்ற பெயரில் ஒரு புதிய திட்டத்தைத் தொடங்க ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளது.

✓ மாற்றுத் திறனாளி சுற்றுலாப் பயணிகளுக்கு புனித யாத்திரையின் தொடக்கம் முதல் இறுதி வரை உதவும் வகையில் இந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

✓ இது தொடர்பாக, மாற்றுத் திறனாளிகள் பதிவு செய்ய ஏதுவாக ஆன்லைன் தளத்தை உருவாக்க அரசு திட்டமிட்டுள்ளது.

✓ இந்தத் திட்டத்தின்கீழ், வழிபாட்டுத் தலங்களில் தனிநபர்கள் வழிபாட்டுக்குச் செல்ல உதவும் வகையில் உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

# நீதிமன்றத் தீர்ப்புகள்

- **பொருளாதாரத்தின் பின்தங்கிய பிரிவினர்**

✓ 'பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவு பயனாளிகளை அடையாளம் காண்பதற்கான விதிமுறைகளை மாநிலங்கள் அமைக்கலாம்' 10 விழுக்காடு பொருளாதாரத்தில் பின்தங்கிய வகுப்பினருக்கான ஒதுக்கீட்டின்கீழ், பொருளாதார பின்னடைவைக் கண்டறிவதற்கான வழிகாட்டுதல்கள் இல்லாததால் 103 வது திருத்தத்தை கேள்விக்கு உட்படுத்த முடியாது என்று திங்களன்று அரசியலமைப்பு அமர்வின் பெரும்பான்மை தீர்ப்பு கூறியது.

✓ பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவினருக்கான ஒதுக்கீட்டின் பயனாளிகளை அடையாளம் காண்பதற்கான அளவுருக்களை அமைப்பதற்கு மாநிலங்களுக்கு அனுமதி வழங்கி நீதிபதி ஆணையிட்டார். 'எந்தவொரு குறிப்பிட்ட பிரிவினரோ அல்லது நபரோ 'பொருளாதார ரீதியாக நலிவடைந்த பிரிவினர்' என்ற வகுப்பிற்குள் வருவார்களா என்ற கேள்வி, அரசால் வகுக்கப்பட்டுள்ள அளவுருக்கள் மற்றும் குறிகாட்டிகளைக் கொண்டு தீர்மானிக்கப்பட வேண்டிய கேள்வியாக இருக்கலாம்' என்று அவர் குறிப்பிட்டார்.

# மாநாடுகள் மற்றும் உச்சி மாநாடுகள்

➢ **கெம் 2022 (Chem 2022)**

✓ இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் சர்வதேச கண்காட்சி மற்றும் மாநாடு இந்தியா கெம் 2022இன் 12வது பதிப்பு – புதுதில்லியின் பிரகதி மைதானத்தில் நவம்பர் 2 மற்றும் 3 ஆகிய தேதிகளில் நடைபெற்றது.

✓ இந்தியா கெம் 2022, இரசாயனத் தொழில் துறையின் பங்குதாரர்களுக்கான ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் மிகப்பெரிய கூட்டு நிகழ்வுகளில் ஒன்றாகும்.

✓ ‘தொலைநோக்கு 2030: கெமிக்கல்ஸ் மற்றும் பெட்ரோகெமக்கல்ஸ் இந்தியாவைக் கட்டமைக்கும்’ என்ற கருப்பொருளின் அடிப்படையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

✓ வேதிப் பொருட்கள் மற்றும் பெட்ரோகெமிக்கல் தொழில்துறையின் நிலையான வளர்ச்சியை இலக்காகக் கொண்ட அரசின் கொள்கைகளை இது எடுத்துக்காட்டுகிறது.

➢ **காப் 27 (COP27)**

✓ பொதுவாக ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்ற மாநாட்டு உறுப்பு நாடுகளின் மாநாடு (UNFCCC) என்று அழைக்கப்படும் ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்ற மாநாடு (United Nations Climate Change Conference) அல்லது காப் 27 – நவம்பர் 6 அன்று எகிப்திய ரிசார்ட் நகரமான ஷர்ம் எல்-ஷேக்கில் தொடங்கியது.

✓ ஐ.நா காலநிலை மாநாட்டின் முதல் நாளில், இந்தியா உட்பட 190க்கும் மேற்பட்ட பங்கேற்பு நாடுகள், காப் 27 நிகழ்ச்சி நிரலில் இழப்பு மற்றும் சேதத்திற்கான நிதியைச் சேர்க்க ஒப்புக் கொண்டன.

✓ பணக்கார நாடுகளின் வரலாற்று உமிழ்வுகள் காரணமாக காலநிலை மாற்றத்தின் தாக்கங்களை எதிர்கொள்ள வேண்டிய ஏழை மற்றும் பாதிக்கப்படக்கூடிய நாடுகளுக்கு ஆதரவளிப்பதற்கான ஒரு பொறிமுறையை உருவாக்குவதற்கு இது ஒரு முக்கியமான படியாகும்.

➢ **நகர்ப்புற இயக்க இந்தியா மாநாடு மற்றும் பொருட்காட்சி (Urban Mobility India Conference & Expo)**

✓ கேரளாவில், கொச்சியில் நகர்ப்புற இயக்க இந்தியா மாநாடு மற்றும் பொருட்காட்சியின் 15வது பதிப்பு நவம்பர் 4ஆம் தேதி தொடங்குகிறது. ஒன்றிய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி மற்றும் கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் ஆகியோர் இந்த மூன்று நாள் மாநாட்டை கூட்டாகத் தொடங்கி வைத்தனர்.

✓ ‘ஆசாதி @75 – நிலையான ஆத்மநிர்பர் நகர்ப்புற இயக்கம்’ என்ற கருப்பொருளில் நடத்தப்படுகிறது.

➢ **இடம்பெயர்வு மற்றும் இயக்கம் (Migration and Mobility) பற்றிய உயர்நிலை பேச்சு வார்த்தை**

✓ இந்தியாவிற்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இடையிலான இடம்பெயர் மற்றும் இயக்கம் பற்றிய 6வது உயர்நிலை பேச்சு வார்த்தை – அக்டோபர் 27 அன்று பிரஸ்ஸல்ஸில் நடைபெற்றது.

✓ ஒழுங்கற்ற இடம்பெயர்வுகளைத் தடுப்பது உட்பட பாதுகாப்பான, ஒழுங்கான மற்றும் வழக்கமான இடப்பெயர்வை மேம்படுத்துவது தொடர்பான பரந்த அளவிலான சிக்கல்கள் இந்தப் பேச்சுவார்த்தையில் இடம்பெற்றுள்ளன.

- ✓ இடம்பெயர்வு மற்றும் இயக்கம் தொடர்பான இந்தியா – ஐரோப்பிய ஒன்றிய பொது நிகழ்ச்சி நிரல் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டதில் இருதரப்பும் தங்கள் திருப்தியைத் தெரிவித்தன.

## ➢ இந்திய நீர் வாரம் - நவம்பர் 1-5

- ✓ இந்திய நீர் வாரம் 2022 நவம்பர் 1 முதல் 5 வரை கொண்டாடப்பட்டது.
- ✓ விழிப்புணர்வு, பாதுகாப்பு மற்றும் ஒருங்கிணைந்த முறையில் நீர் ஆதாரங்களைப் பயன்படுத்துவதற்கான முயற்சியாக, ஒன்றிய நீர்வள அமைச்சகம், 2022 நவம்பர் 1 முதல் 5 வரை இந்திய நீர் வாரத்தின் 7வது பதிப்பை ஏற்பாடு செய்தது.
- ✓ இந்த 7வது பதிப்பின் கருப்பொருள் 'நிலையான வளர்ச்சி மற்றும் சமத்துவதற்கான நீர் பாதுகாப்பு' என்பதாகும். India Water Week to be celebrated from 1st - 5th November 2022.

## ➢ காலநிலைக்கான சதுப்பு நிலக் கூட்டணி (Mangrove Alliance for Climate)

- ✓ காப் 27 நிகழ்வின்போது, காலநிலைக்கான சதுப்பு நிலக் கூட்டணியில் இந்தியா இணைகிறது.
- ✓ காடு அழிப்பு மற்றும் வனச் சீரழிவு (Reducing Emissions from Deforestation and Forest Degradation) திட்டங்களில் இருந்து காடுகளை அழித்தல் திட்டங்களுடன் சதுப்பு நிலப் பாதுகாப்பை ஒருங்கிணைப்பதற்காக அழைப்பு விடுத்து, காலநிலைக்கான சதுப்பு நிலக் கூட்டணியில் இந்தியா இணைந்தது.
- ✓ காலநிலைக்கான சதுப்பு நிலக் கூட்டணி என்பது அரசுகளுக்கு இடையேயான ஒரு கூட்டணியாகும். இது சதுப்பு நில சுற்றுச்சூழல் அமைப்புகளின் பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்புக்கான முன்னேற்றத்தை விரிவுபடுத்தவும் துரிதப்படுத்தவும் முயல்கிறது. ஐக்கிய அரபு அமீரகம், இந்தோனேசியா, இந்தியா, இலங்கை, ஆஸ்திரேலியா, ஜப்பான் மற்றும் ஸ்பெயின் ஆகியவை இதன் உறுப்பு நாடுகளாகும்.

## ➢ ஜி 20 உச்சி மாநாடு

- ✓ பிரதமர் நரேந்திர மோடி – ஜி20 மாநாட்டில் பங்கேற்பதற்காக மூன்று நாள் பயணமாக நவம்பர் 14 ஆம் தேதி பாலி சென்றார்.
- ✓ இந்தோனேசியாவின் பாலியில் நடைபெறும் ஜி20 உச்சி மாநாட்டில் உணவு மற்றும் ஆற்றல் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் டிஜிட்டல் மாற்றம் தொடர்பான அமர்வுகளில் அவர் பங்கேற்றார்.
- ✓ அமெரிக்க அதிபர் ஜோ பைடன், இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக், சீன அதிபர் ஜி ஜின்பிங் மற்றும் பல உலகத்தலைவர்கள் இந்த ஜி20 உச்சி மாநாட்டில் கலந்து கொண்டனர்.
- ✓ ஆண்டுக் கூட்டத்தின் நிறைவு விழாவில் இந்தோனேசியாவிலிருந்து டிசம்பர் 1, 2022 முதல் ஒரு வருட காலத்திற்கு ஜி20 தலைவர் பதவியை இந்தியா ஏற்றது.

## ➢ ஜி20 பாலியில் தலைவர்களின் பிரகடனம்

- ✓ நவம்பர் 16 அன்று, இந்தோனேசிய அதிபர் ஜோகோ விடோடோ – பாலியில் இரண்டு நாள் ஜி20 உச்சி மாநாட்டின் முடிவில் பிரதமர் நரேந்திர மோடியிடம் ஜி20 தலைவர் பதவியை ஒப்படைத்தார்.
- ✓ 'ஜி 20 பாலி தலைவர்கள் பிரகடனம்' என்ற தலைப்பில் உறுப்பு நாடுகள் கூட்டுப் பிரகடனத்தை வெளியிட்டதைத் தொடர்ந்து, ஒப்படைப்பு விழா நிறைவு பெற்றது.

- ✓ 'இன்றைய சகாப்தம் போராக இருக்கக் கூடாது' என்று கூறியவாறு, ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினுக்கு பிரதமர் நரேந்திர மோடியின் செய்தியை ஜி20 அறிக்கை எதிரொளித்தது.

## ➢ பாரிஸ் அமைதி மன்றம் (Paris Peace Forum)

- ✓ பாரிஸ் அமைதி மன்றத்தின் ஐந்தாவது பதிப்பு – சமீபத்தில் பாரிசில் நவம்பர் 11 மற்றும் 12 ஆகிய தேதிகளில் நடைபெற்றது.
- ✓ பல நெருக்கடிகளின் சமூக பொருளாதார தாக்கத்தை சமாளிப்பதற்கான வழிமுறைகள், முக்கிய பிரச்சினைகளில் சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்துதல், பன்முகத் தன்மையை ஆதரித்தல் மற்றும் உலகளாவிய ஒத்துழைப்பு வழிமுறைகளை மேம்படுத்துதல் ஆகியவற்றில் இந்த மன்றம் கவனம் செலுத்துகிறது.
- ✓ இந்த மன்றத்தின் ஐந்தாவது பதிப்பு 'பல்வகை நெருக்கடியிலிருந்து வெளியேறுதல்' என்ற கருப்பொருளின் அடிப்படையில் ஏற்பாடு செய்யப்பட்டது.

## ➢ இந்தோ – பசிபிக் பிராந்திய பேச்சு வார்த்தை (Indo-Pacific Regional Dialogue)

- ✓ இந்தோ-பசிபிக் பிராந்திய பேச்சு வார்த்தையின் நான்காவது பதிப்பு – நவம்பர் 23 அன்று புது தில்லியில் தொடங்கியது.
- ✓ இந்தோ-பசிபிக் பிராந்திய பேச்சு வார்த்தை என்பது இந்திய கடற்படையின் உயர்நிலை சர்வதேச வருடாந்திர மாநாடு ஆகும்.
- ✓ நவம்பர் 25 வரை நடைபெறும் இந்த நிகழ்வின் கடற்படையின் அறிவுப் பங்காளியாகவும் தலைமை அமைப்பாளராகவும், தேசிய கடல்சார் அறக்கட்டளை உள்ளது.
- ✓ இந்த உச்சநிலை பிராந்திய பேச்சுவார்த்தையின் நோக்கம் இந்தோ-பசிபிக் பகுதிக்குள் வெளிப்படும் வாய்ப்புகள மற்றும் சவால்களை மதிப்பிடுவதாகும்.
- ✓ இந்த இந்தோ-பசிபிக் பிராந்திய பேச்சு வார்த்தை 2022இன் கருப்பொருள், 'இந்தோ-பசிபிக் பெருங்கடல்களின் முன் முயற்சியை செயல்படுத்துதல்' என்பதாகும்.
- ✓ இது நவம்பர் 4, 2019 அன்று பாங்காக்கில் நடைபெற்ற 14வது கிழக்கு ஆசிய உச்சி மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடியால் குறிப்பிடப்பட்டது.

## ➢ 25வது தேசிய மின் ஆளுமை மாநாடு (National Conference on e-Governance)

- ✓ ஒன்றிய அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் - நவம்பர் 26 அன்று ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் உள்ள கத்ராவில் மின்-ஆளுமை பற்றிய 25வது தேசிய மாநாட்டைத் தொடங்கி வைத்தார்.
- ✓ இரண்டு நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டின் கருப்பொருள், 'குடிமக்கள், தொழில்துறை மற்றும் அரசாங்கத்தை நெருக்கமாகக் கொண்டு வருதல்' என்பதாகும்.
- ✓ இந்த மாநாட்டை ஜம்மு காஷ்மீர் அரசுடன் இணைந்து நிர்வாக சீர்திருத்தங்கள் மற்றும் பொது குறைகள் துறை மற்றும் ஒன்றிய மின்னனு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் இணைந்து ஏற்பாடு செய்தது.

# பாதுகாப்பு

- **மலபார் கடற்படை பயிற்சி – 2022**
  - நவம்பர் 8, 2022 அன்று ஜப்பானின் யோகோசுகாவில் தொடங்கும் 26வது சர்வதேச மலபார் கடற்படைப் பயிற்சியில் இந்தியா பங்கேற்கிறது.
  - ஆஸ்திரேலியா, ஜப்பான் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளும் மலபார் கடற்படை பயிற்சியில் பங்கேற்கின்றன. இந்திய கடற்படைக் கப்பல்களான ஷிவாலிக் மற்றும் கமோர்டா ஆகியவை இந்த நிகழ்வின்போது தங்களது வல்லமையைக் காட்டத் தயாராக உள்ளன.

- **கடல் விழிப்பு (Sea Vigil) 22**
  - இந்திய கடற்படை -நவம்பர் 15 அன்று பாரதீப் கடற்கரையில் இரண்டு நாள் மெகா கடலோர பாதுகாப்புப் பயிற்சியான 'கடல் விழிப்பு 22'இன் மூன்றாவது பதிப்பைத் தொடங்கியது.
  - இது அனைத்து கடலோர மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் மற்றும் மீன்பிடி மற்றும் கடலோர சமூகங்கள் உள்பட கடல்சார் பங்குதார்களுடன் இணைக்கப்படும்
  - இந்தப் பயிற்சியானது, இந்திய கடற்படையால், கடலோர காவல் படை, மகாராஷ்டிரா காவ்துறை மற்றும் கடல்சார் நடவடிக்கைகளின் பணி ஒப்படைக்கப்பட்ட இதர அமைச்சகங்களால் நடத்தப்படுகிறது.

- **இளைஞர் பயிற்சி (Yudh Abhyas)**
  - இந்திய அமெரிக்க கூட்டு இராணுவப் பயிற்சியாகிய 'இளைஞர் பயிற்சி' உத்தரகாண்டில் தொடங்கப்பட உள்ளது.
  - இளைஞர் பயிற்சி என்பது 15 நாள் நீண்ட பயிற்சியாகும். இது அதிக உயரம் மற்றும் மிகவும் குளிரான காலநிலை போரில் கவனம் செலுத்தும்.
  - இரு நாடுகளின் இராணுவங்களுக்கு இடையில், சிறந்த நடைமுறைகள், தந்திர உபாயங்கள், நுட்பங்கள் மற்றும் நடைமுறைகளை பரிமாறிக் கொள்வதற்காக ஆண்டுதோறும் இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையே இந்த இளைஞர் பயிற்சி நடத்தப்படுகிறது.
  - இரண்டு நாடுகளின் துருப்புகளும் பொதுவான நோக்கங்களை அடைவதற்காக இணைந்து செயல்படும்.

- **சமன்வே (Samanvay) 2022**
  - இந்திய விமானப் படையானது வருடாந்திர கூட்டு மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரண பயிற்சியாகிய 'சமன்வே 2022' ஐ, 28-30 நவம்பர் 2022 வரை விமானபடை நிலையம் ஆக்ராவில் நடத்துகிறது.
  - இந்தப் பயிற்சியில், பேரிடர் மேலாண்மை குறித்த கருத்தரங்கு, பல்வேறு மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரண பயிற்சி சொத்துகளின் நிலையான மற்றும் பறக்கும் காட்சிகள் மற்றும் 'டேபிள்டாப் பயிற்சி' ஆகியவற்றை உள்ளடக்கிய 'மல்டி முகமை பயிற்சி' ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

- **கருட சக்தி**
  - இந்தியா -இந்தோனேசிய கூட்டுப் பயிற்சியான 'கருட சக்தி' ஜாவாவில தொடங்குகிறது.
  - இந்திய இராணுவம், இந்தோனேசியாவின் கரவாங்கில் இந்தோனேசிய சிறப்புப் படைகளுடன் இணைந்து கருட சக்தி என்ற இருதரப்பு கூட்டுப் பயிற்சியில் பங்கேற்கிறது.

- ✓ இந்தப் பயிற்சி 21 நவம்பர் 2022 அன்று தொடங்கியது.
- ✓ கருட சக்தி பயிற்சி என்பது இருதரப்புப் பயிற்சிகளின் எட்டாவது பதிப்பாகும்.
- ✓ இந்தப் பயிற்சியானது இரு படைகளின் சிறப்புப் படைகளுக்கு இடையே புரிதல், ஒத்துழைப்பு மற்றும் இயங்குதன்மையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

### ➢ நசீம் அல் பஹ்ர் (Naseem Al Bahr)

- ✓ இந்திய கடற்படையின் ஐஎன்எஸ திரிக்ண்ட் மற்றும் ஐஎன்எஸ் சுமித்ரா ஆகியவை ஓமன் கடற்கரையில் 13வது இருதரப்பு பயிற்சியான ‘நசீம் அல் பஹ்ர்’ நிகழ்ச்சியில் பங்கேற்றன.
- ✓ 2022 நவம்பர் 19 முதல் 24 ரை நடத்தப்பட்ட இந்தப் பயிற்சியானது, துறைமுகக் கட்டம், கடல் கட்டம் மற்றும் விவாதம் என 3 கட்டங்களைக் கொண்டிருந்தது.
- ✓ முதல் பயிற்சி 1993இல் நடத்தப்பட்டது.
- ✓ 2022ஆம் ஆண்டு, இந்திய கடற்படை மற்றும் ஓமன் ராயல் கடற்படையின் இருதரப்புப் பயிற்சிகளின் 30 ஆண்டுகளைக் குறிக்கிறது.

### ➢ கடல் வாள் (Sea Sword) 2

- ✓ ஐஎன்எஸ் திரிகண்ட் வடமேற்கு அரேபியக் கடலில் ஒருங்கிணைந்த கடல்சார் படைகள் தலைமையிலான ‘கடல் வாள் 2’ நடவடிக்கையில் பங்கேற்றுள்ளது. போதைப் பொருள் வர்த்தகத்தைத் தடுக்கவும், கடத்தல் நிறுவனங்கள் தங்கள் தீய செயல்களுக்கு கடல்களைப் பயன்படுத்துவதைத் தடுப்பதற்காகவும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.
- ✓ இந்தப் பயிற்சியானது, பயிற்சியின் 30வது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது மற்றும் ஜப்பான் கடல்சார் தற்காப்புப் படையால் (the Japan Maritime Self-Defense Force) நடத்தப்பட்டது. இந்த முயற்சியானது, மாண்புமிகு பாரதப் பிரதமரின் சாகர் (SAGAR) தொலைநோக்குப் பார்வையின்படி, கடல்களின் பாதுகாப்பையும், பிராந்தியத்தில் கூட்டுப் பாதுகாப்பையும் உறுதி செய்வதற்கான இந்திய கடற்படையின் உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாகும்.

### ➢ கருடா ஏழாவது விமானப் பயிற்சி

- ✓ இந்திய மற்றும் பிரான்ஸ் விமானப்படைகளின் தலைவர்கள் செவ்வாயன்று, ஜோத்பூரில் உள்ள விமானப் பயற்சி கருடா ஏழில் இணைந்தனர்.
- ✓ இது, எக்ஸ் கருடா 7 இலகுரக போர் விமானம் தேஜாஸ் மற்றும் இலகுரக போர் ஹெலிகாப்டர் பிரசாந்த் ஆகியவை எந்தவொரு சர்வதேச பயிற்சியிலும் பங்கேற்பது இதுவே முதல்முறை ஆகும்’ என்று அது கூறியது.

### ➢ ஆஸ்த்ரா ஹிந்த் (Austra Hind) 22

- ✓ இந்திய ராணுவத்திற்கும் ஆஸ்திரேலிய ராணுவத்திற்கும் இடையிலான இருதரப்புப் பயிற்சி ‘ஆஸ்த்ரா ஹிந்த் 22’ ராஜஸ்தானில் உள்ள மஹாஜன் ஃபீல்டு ஃபையரிங் ரேஞ்சில் தொடங்கியது. இப்பயிற்சி டிசம்பர் 11 ஆம் தேதி வரை நடைபெற்றது.
- ✓ ஆஸ்த்ரா ஹிந்த் என்ற தொடரில் இரு படைகளின் அனைத்து ஆயுதங்கள் மற்றும் சேவைகள் பங்கேற்கும் முதல் பயிற்சி இதுவாகும்.
- ✓ இந்தக் கூட்டுப் பயிற்சியானது, இரு படைகளுக்கும் இடையே புரிந்துணர்வு மற்றும் இயங்குநிலையை மேம்படுத்துவதுடன், இந்தியாவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்த உதவும்.

- **ஹரிமௌ சக்தி (Harimau Shakti) - 2022**

✓ இந்தியா -மலேசியா கூட்டு இராணுவப் பயிற்சியாகிய ‘ஹரிமௌ சக்தி – 2022’ நவம்பர் 28ஆம் தேதி மலேசியாவின் க்லுவாங்கில் உள்ள புலாயில் தொடங்கி டிசம்பர் 12ஆம் தேதி முடிவடைந்தது.

✓ இந்தக் கூட்டுப் பயிற்சி அட்டவணையில், பட்டாலியன் மட்டத்தில் தளவாடங்களைத் திட்டமிடுதல் மட்டுமல்லாது, கூட்டுக் கட்டளைப் பதவி, கூட்டுக் கண்காணிப்பு மையம், வான்வழி சொத்துக்களின் பயன்பாட்டில் நிபுணத்துவத்தைப் பகிர்ந்து கொள்ளுதல், தொழில்நுட்ப விளக்கங்கள், விபத்து மேலாண்மை மற்றும் விபத்தில் சிக்கியவர்களை காப்பாற்றுதல் ஆகியவை அடங்கும்.

# நியமனங்கள்

- **நீதியரசர் டி.ஒய். சந்திரசூட்**
- ✓ நீதியரசர் டி.ஒய். சந்திரசூட், 9 நவம்பர் 2022 அன்று இந்தியாவின் புதிய தலைமை நீதிபதியாக பதவியேற்றார். குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, குடியரசுத் தலைவர் மாளிகையில் இந்தியாவின் புதிய தலைமை நீதிபதி நீதியரசர் டி.ஒய். சந்திரசூட்டுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.
- ✓ 8 நவம்பர் 2022 அன்று ஓய்வுபெற்ற நீதியரசர் யு.யு. லலித்துக்குப் பிறகு அவர் பதவியேற்றுள்ளார்.
- ✓ நீதியரசர் தனஞ்செய யஷ்வ்த் சந்திரசூட், இந்தியாவின் 50வது தலைமை நீதிபதி ஆவார்.

- **அருணா மில்லர்**
- ✓ அருணா மில்லர் 8 நவம்பர் 2022 அன்று அமெரிக்காவின் மேரிலாண்ட் மாநிலத்தில் துணை ஆளுநர் (Lieutenant Governor) பதவியேற்றுக் கொண்ட முதல் இந்திய அமெரிக்க அரசியல்வாதி என்ற பெருமையைப் பெற்றார்.
- ✓ இத்தகைய முக்கியமான பதவியில் பணியாற்றும் முதல் தெற்காசியப் பெண்மணியும் இவர்தான்.
- ✓ ஆளுநருக்கு அடுத்தபடியாக, மாநிலத்தின் மிக உயர்ந்த பதவி துணை ஆளுநர் பதவி ஆகும்.

- **சி.வி. ஆனந்த போஸ்**
- ✓ முன்னாள் அதிகாரியாகிய சி.வி. ஆனந்த போஸ், மேற்கு வங்காளத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்டார் என்று குடியரசுத் தலைவர் மாளிகை வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- ✓ நல்லாளுமைத் துறையில் புதுமையான சிந்தனைகளுக்குப் பெயர் பெற்றவர் அவர். ஐக்கிய நாடுகள் சபை அவரது முயற்சிகளை ‘உலகளாவிய சிறந்த நடைமுறை’ என நான்கு முறை தேர்வு செய்துள்ளது. இவர் ஒரு சிறந்த எழுத்தாளர். இவர் ஆங்கிலம், இந்தி மற்றும் மலையாளம் மொழிகளில் பல்வேறு வகைகளில் 32 புத்தகங்களை வெளியிட்டுள்ளார்.

- **அன்வர் இப்ராஹிம்**
- நவம்பர் 24 அன்று, மூத்த எதிர்கட்சித் தலைவராகிய அன்வர் இப்ராஹிம் - மலேசியாவின் 10வது பிரதமராக மன்னர் சுல்தான் அப்துல்லாவால் நியமிக்கப்பட்டு, கோலாலம்பூரில் உள்ள அரண்மனையில் பதவியேற்றார்.
- ✓ நவம்பர் 19 அன்று நடைபெற்ற தேர்தலில், அன்வரின் நம்பிக்கைக் கூட்டணி (பாக்கத்தான் ஹரப்பான் கட்சி) தனித்து ஆட்சி அமைக்கத் தேவையான 112 பெரும்பான்மைக்குக் குறைவாக 82 இடங்களை வென்றது.
- ✓ 75 வயதான அன்வர் 1990களில் நாட்டின் துணைப் பிரதமராகவும், 2018இல் அதிகாரப் பூர்வ பிரதமராகவும் பணியாற்றினார்.

# விருதுகள்

- **சிறந்த நடவடிக்கைக்கான பதக்கம் (Special Operation Medal)**
  - ✓ 2022ஆம் ஆண்டிற்கான, 'ஒன்றிய உள்துறை அமைச்சரின் சிறந்த நடவடிக்கைக்கான பதக்கம்' நான்கு சிறப்பு நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டுள்ளது.
  - ✓ சர்தார் பட்டேலின் பிறந்த நாளை முன்னிட்டு, காவலர் முதல் கூடுதல் காவல்துறை தலைவர் வரை வெவ்வேறு நிலைகளில் உள்ள மொத்தம் 63 காவல்துறை அதிகாரிகளுக்கு 'ஒன்றிய உள்துறை அமைச்சரின் சிறந்த நடவடிக்கைக்கான பதக்கம்-2022' வழங்கப்பட்டுள்ளது.
  - ✓ அனைத்து வெற்றியாளர்களும் பயங்கரவாதம், எல்லை நடவடிக்கை, ஆயுதக் கட்டுப்பாடு, போதைப் பொருள் கடத்தல் தடுப்பு மற்றும் மீட்புப் பணிகள் ஆகிய துறைகளில் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் நடத்தப்பட்ட சிறப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக இருந்தனர்.

- **செவாலியர் விருது (Chevalier de l'Ordre National du Mérite)**
  - ✓ கர்நாடக இசைக் கலைஞர் அருணா சாய்ராம் - அவர்களுக்கு பிரெஞ்சு அரசின் செவாலியர் விருது (Chevalier de l'Ordre National du Mérite, the Knight of the Order of the Merit) வழங்கப்படும்.
  - ✓ அவரது பாடும்திறமை மற்றும் இந்திய - பிரான்ஸ் உறவுகளின் வளர்ச்சிக்கான அவரது பங்களிப்புக்காக வர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
  - ✓ அருணா சாய்ராம் பத்மஸ்ரீ மற்றும் கலைமாமணி விருது உட்பட பல விருதுகளைப் பெற்றவர்.

- **எக்செல் (EXCELL) விருது**
  - ✓ இந்தியா குடும்பக் கட்டுப்பாடு தலைமைத்துவத்தில் சிறந்து விளங்குவதற்கான (Excellence in Family Planning Leadership) விருதை வென்றது.
  - ✓ தாய்லாந்தில் நடைபெற்ற குடும்பக் கட்டுப்பாடு தொடர்பான சர்வதேச மாநாட்டில் 'நாடுகள் பிரிவில்' குடும்பக் கட்டுப்பாடு விருதுகள் 2022-ஐப் பெற்ற ஒரே நாடு இந்தியா ஆகும்.
  - ✓ குடும்பக் கட்டுப்பாட்டை மேம்படுத்துவதில் இந்தியாவின் முயற்சிகள், பெண்கள் மற்றும் தாய்வழி ஆரோக்கியம் மீதான நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதில் நாடு அடைந்து வரும் முன்னேற்றத்தை எடுத்துக் காட்டுகிறது.

- **மார்தா ஃபேரல் (Martha Farrell) விருது 2022**
  - ✓ சென்னையைச் சேர்ந்த திருநங்கை ஆர்வலர் கிரேஸ் பானு – சமூகத்தின் நலனுக்காக அவர் ஆற்றிய பங்களிப்பிற்காக 2022 ஆம் ஆண்டுக்கான மார்தா ஃபேரல் விருது பெற்றுள்ளார்.
  - ✓ அவர், திருநங்கைகளுக்கு கல்வி, வேலைவாய்ப்பு, தலைமைத்துவம் மற்றும் கிடைமட்ட பிரதிநிதித்துவம் ஆகியவற்றில் சம வாய்ப்புகளை நோக்கிச் செயல்படும் திருநங்கையர் உரிமைகள் நவ் கலெக்டிவ் (Transgender Rights Now Collective) இன் நிறுவனர் ஆவார்.
  - ✓ கிரேஸ் மேலும் 29 மாற்றுத் திறனாளிகளுடன் இணைந்து மந்தித்தோப்பு பால் கூட்டுறவு சங்கத்தின் நிறுவனராகவும் விளங்குகிறார்.
  - ✓ மந்தித்தோப்பு பால் கூட்டுறவு சங்கம், இந்தியாவில் திருநங்கைகளால் நடத்தப்படும் முதல் பால் கூட்டுவ சங்கமாகும்.

## ➢ சீர்திருத்த மாநிலம் விருது (Reformist State' Award)

- ✓ கடந்த வாரம் தில்லியில் நடைபெற்ற 4வது டிஐஓஎல் தேசிய வரிவிதிப்பு விருதுகள் (TIOL National Taxation Awards) 2022 விழாவில், தமிழகத்திற்கு 'சீர்திருத்த மாநிலம் விருது' பெற்ற நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் மற்றும் நிதித்துறையின் மூத்த அதிகாரிகளை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், செவ்வாய்க்கிழமை பாராட்டினார்.
- ✓ நிதித்துறை செயலாளர் என். முருகானந்தம், நிதி (செலவு) செயலாளர் வி. அருண்ராய், சிறப்பு செயலாளர் ரீட்டா ஹரீஷ் தக்கர் மற்றும் பிற அதிகாரிகள் இந்த விழாவில் கலந்து கொண்டனர்.

## ➢ இந்திரா காந்தி பரிசு

- ✓ பிரதாம் அமைப்பு கல்வியில் தான் ஆற்றிய பணிகளுக்காக இந்திரா காந்தி பரிசைப் பெறுகிறது.
- ✓ முன்னாள் குடியரசு துணைத் தலைவர் ஹமீத் அன்சாரி, 2021ஆம் ஆண்டின் அமைதி, ஆயுதக் குறைப்பு மற்றும் மேம்பாட்டிற்கான இந்திரா காந்தி பரிசை கல்வித் துறையில் சிறப்பாக செயல்படும் பிரதாம் என்ற தன்னார்வ தொண்டு நிறுவனத்திற்கு வழங்கினார்.
- ✓ நாட்டின் குழந்தைகளுக்கு, குறிப்பாக பெருந்தொற்றின்போது தரமான கல்வியை உறுதி செய்வதில் பிரதாமின் பணியை அங்கீகரிக்கும் வகையில் இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

## ➢ குவேம்பு (Kuvempu) தேசிய விருது

- ✓ குவேம்பு தேசிய விருதுக்கு தமிழ் எழுத்தாளர் இமயம் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- ✓ ராஷ்டிரகவி குவேம்பு பிரதிஷ்டான குப்பலி அமைப்பு, 2022ஆம் ஆண்டிற்கான குவேம்பு தேசிய விருதுக்கு தமிழ் கவிஞர் வி. அண்ணாமலையை தேர்வு செய்துள்ளது.
- ✓ டிசம்பர் 29 அன்று தீர்த்தஹள்ளி தாலுகாவில் உள்ள குப்பாலியில் நடைபெறும் குவேம்பு பிறந்த நாள் நிகழ்ச்சியில் அண்ணாமலைக்கு இந்த விருது வழங்கப்படும்.
- ✓ அண்ணாமலை இமயம் என்ற புனைப்பெயரில் எழுதுகிறார்.

## ➢ யுனெஸ்கோ பாரம்பரிய விருதுகள்

- ✓ ஐதராபாத்தில் உள்ள குதுப் ஷாஹி கல்லறை வளாகத்தில் உள்ள 17ஆம் நூற்றாண்டின் படிக்கட்டுக் கிணறுகளை மீட்டமைத்ததற்காகவும், காமரெட்டி மாவட்டத்த் தோமகொண்டா கோட்டையில் 18ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட பாதுகாப்புப் பணிகளுக்காகவும், யுனெஸ்கோவின் ஆசிய பசிபிக் விருதுகளிலட, கலாச்சார பாரம்பரியப் பாதுகாப்புக்காக தெலுங்கானா இரட்டை வெற்றியைப் பெற்றது.
- ✓ இந்த விருதுகள் சனிக்கிழமை அன்று பாங்காக்கில் அறிவிக்கப்பட்டன.

## ➢ யுனெஸ்கோ ஆசிய பசிபிக் விருதுகள் - கலாச்சார பாரம்பரிய பாதுகாப்பு

- ✓ மும்பையில் உள்ள 100 ஆண்டுகள் பழமையான சத்ரபதி சிவாஜி மகாராஜ் வாஸ்து சங்க்ரஹாலயாவின் மறுசீரமைப்பானது, இந்த ஆண்டு யுனெஸ்கோவில் கலாச்சார பாரம்பரிய பாதுகாப்புக்கான ஆசிய பசிபிக் விருதுகளில், 'சிறந்த விருதை' வென்றுள்ளது.
- ✓ இந்த அருங்காட்சியகம் மும்பையின் உலக பாரம்பரிய சொத்தின் விக்டோரியன் கோதிக் மற்றும் ஆர்ட் டெகோ குழுமங்களின் ஒரு பகுதியாகும்.

# புகழ்பெற்ற நபர்கள்

- **ஷியாம் சரண் நேகி**
- ✓ நவம்பர் 2ஆம் தேதி, சுதந்திர இந்தியாவின் முதல் வாக்காளர், 34 முறை வாக்களித்த 106 வயதான ஷியாம் சரண் நேகி – முதல் முறையாக தபால் வாக்கு செலுத்தினார்.
- ✓ நவம்பர் 12ஆம் தேதி நடைபெற்ற இமாச்சலப் பிரதேச சட்டமன்றத் தேர்தலுக்கான தனது வாக்குரிமையை அவர் கின்னவர் மாவட்டத்தில் கல்பாவில் உள்ள அவரது இல்லத்தில் பயன்படுத்தினார்.
- ✓ ஜூலை 1917ஆம் ஆண்டு பிறந்த நேகி, 1951 ஆம் ஆண்டு அக்டோபர் 23ஆம் தேதி முதல் முறையாக இந்தியாவின் பொதுத் தோடதலில் வாக்களித்தார். அவர் மக்களவைத் தேர்தலில் பதினாறு முறை வாக்களித்துள்ளார்.
- ✓ இந்தியாவின் முதல் தேர்தல் பிப்ரவரி 1952இல் நடைபெற்றது. ஆனால் இமாச்சலப் பிரதேசத்தில் உள்ள தொலைதூர, பழங்குடிப் பகுதிகளுக்கான வாக்குப்பதிவு ஐந்து மாதங்களுக்கு முன்பே நடைபெற்றது.

- **அழ வள்ளியப்பா**
- ✓ நவம்பர் 7ஆம் தேதி, பிரதமர் நரேந்திர மோடி – அழ. வள்ளியப்பாவின் 100வது பிறந்த நாளை முன்னிட்டு, அவரக்கு அஞ்சலி செலுத்தினார்.
- ✓ குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா, குழந்தைகளுக்கான இலக்கியப் பணிக்காக அறியப்பட்ட ஒரு புகழ்பெற்ற தமிழ் எழுத்தாளர் ஆவார்.
- ✓ புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள ராயவரத்தில் பிறந்தவர் அழ. வள்ளியப்பா (நவம்பர் 7, 1922 – மார்ச் 16, 1989) ஒரு முக்கிய குழந்தைகள் கவிஞர் ஆவார். அவர் 13 வயதிலிருந்தே கவிதைகள் எழுதத் தொடங்கினார்.
- ✓ தமிழ் குழற்தைகள் இலக்கியத்தின் தந்தை எனப் போற்றப்படும் இவர், 1000க்கும் மேற்பட்ட கவிதைகளையும் 55க்கும் மேற்பட்ட நூல்களையும் எழுதியுள்ளார்.

# புத்தகங்களும் எழுத்தாளர்களும்

- **ஜனநாயகத்தின் தாய் (The Mother of Democracy)**
- ✓ இந்திய வரலாற்று ஆராய்ச்சி கவுன்சில் தயாரித்து வெளியிட்ட ‘இந்தியா: ஜனநாயகத்தின் தாய்’ என்ற புத்தகத்தை ஒன்றிய கல்வி மற்றும் திறன் மேம்பாட்டு அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் புதுதில்லியில் வெளியிட்டார்.
- ✓ நாகரிகம் தோன்றிய காலத்திலிருந்தே இந்தியாவில் வேரூன்றியிருந்த ஜனநாயக நெறிமுறைகளை வெளிக் கொணரும் முயற்சியே இந்தப் புத்தகம் ஆகும். நாகரிகம் தோன்றிய காலத்திலிருந்தே, இந்தியா ஜனநாயக நெறிமுறைகளால் நிரம்பியுள்ளது என்பதை இந்நூல் காட்டுகிறது.

# பொருளாதாரம்

- **மொத்த ஜிஎஸ்டி வருவாய் - அக்டோபர் 2022**

✓ அக்டோபர் 2022 இல் வசூலிக்கப்பட்ட மொத்த ஜிஎஸ்டி வருவாய் - ரூ.1,51,718 கோடி ஆகும். இது ஒவ்வொரு ஆண்டும் 16.6 விழுக்காடு உயர்வு ஆகும்.

✓ ஜூலை 2107இல் மறைமுக வரிவிதிப்பு தொடங்கப்பட்டதிலிருந்து இது இரண்டாவது அதிகபட்ச மாதாந்திர வசூலாகும்.

✓ 2022 ஏப்ரலில் இதுவரை வசூலாக அதிகபட்ச ஜிஎஸ்டி ரூ.1.68 இலட்சம் கோடியாக இருந்தது. இது மார்ச் மாதத்தில் ஆண்டு இறுதி விற்பனை ஆகும்.

- **மத்திய வங்கி டிஜிட்டல் நாணயம் (Central Bank Digital Currency)**

✓ நவம்பர் 1 முதல் அரசுப் பத்திரங்களில் இரண்டாம் நிலை வர்த்தகத்திற்காக மொத்த சந்தையில் மத்திய வங்கி டிஜிட்டல் நாணயத்தை பயன்படுத்துவதற்கான தனது முதல் முன்னோடித் திட்டத்தை இந்திய ரிசர்வ் வங்ளி அறிவித்துள்ளது.

✓ வாடிக்கையாளர்கள் மற்றும் வணிகர்களின் மூடிய பயனர் குழுக்களில் சில்லறை விற்பனைப் பிரிவில் இதேபோன்ற முன்னோடித் திட்டத்தை மத்திய வங்கி ஒரு மாதத்திற்குள் தொடங்கும்.

✓ ஒன்பது வங்கிகள் ஏற்கனவே மத்திய வங்கி டிஜிட்டல் நாணயத்தில் பரிவர்த்தனை செய்வதற்காக ரிசர்வ் வங்கியில் கணக்குகளைத் தொடங்கியுள்ளன. ஒரு பரிவர்த்தனை நடந்தால், உடனயாக பணம் மாற்றப்படும்.

- **உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரம்**

✓ 2027க்குள் இந்தியா மூன்றாவது பெரிய பொருளாதாரமாக மாறும்: மோர்கன் ஸ்டான்லி.

✓ உலகப் போக்குகள் மற்றும் தொழில்நுட்பம் மற்றும் ஆற்றலில் நாடு செய்த முக்கிய முதலீடுகள் காரணமாக, 2027ஆம் ஆண்டில் இந்தியாவானது ஜப்பான் மற்றும் ஜெர்மனியை விஞ்சி, 2030ஆம் ஆண்டில் மூன்றாவது பெரிய பங்குச் சந்தையாக மாறும் பாதையில் உள்ளது என்று மோர்கன் ஸ்டான்லி கூறுகிறார்.

- **சில்லறை டிஜிட்டல் ரூபாய் (e-R)**

✓ இந்திய ரிசர்வ் வங்கி – பாரத ஸ்டேட் வங்கி, ஐசிஐசிஐ வங்கி, ஐடிஎஃப்சி ஃபர்ஸ்ட் வங்கி மற்றும் யெஸ் வங்கி ஆகிய நான்கு வங்கிகளுடன் சில்லறை டிஜிட்டல் ரூபாய் (இ-ஆர்) முன்னோடியாக டிசம்பர் 1ஆம் தேதி தொடங்கப்படும் என்று கூறியுள்ளது.

✓ டிஜிட்டல் ரூபாய் என்பது ரிசர்வ் வங்கியின் டிஜிட்டல் நாணயமாகும். இது மத்திய வங்கி இந்த மாதத் தொடக்கத்தில் அரசாங்கப் பத்திரங்களில் மொத்தப் பரிவர்த்தனைகளுக்காக அறிமுகப்படுத்தியது.

✓ இ-ஆர் என்பது சட்டப்பூர்வ டெண்டரைக் குறிக்கும் டிஜிட்டல் டோக்கன் வடிவத்தில் இருக்கும்.

✓ தற்போது காகித நாணயம் மற்றும் நாணயங்கள் வெளியிடப்படும் அதே வகைகளில் இதுவும் வெளியிடப்படும்.

# அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல்

➢ **காலநாமக் அரிசி (Kalanamak Rice)**

✓ காலநாமக் அரிசி இப்போது சிறியதாகவும் வலிமையாகவும் உள்ளது.

✓ இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம், இரு மடங்கு மகசூலைத் தரும இரண்டு புதிய சிறிய வகைகளை உத்தரப் பிரதேசத்தில் வெற்றிகரமாகச் சோதனை செய்துள்ளது.

✓ புத்தர் ஞானம் பெற்ற பிறகு ஸ்ரவஸ்தி பகுதிக்கு விஜயம் செய்தபோது அப்பகுதி மக்களுக்கு புத்தர் அளித்த பரிசாகக் கருதப்படும் கருப்பு உமி மற்றும் வலுவான மணம் கொண்ட பாரம்பரிய நெல் வகையான காலநாமக், தற்போது புதிய தோற்றத்தையும் பெயரையும் பெறுவதற்குத் தயாராக உள்ளது

➢ **அமுர் பருந்துகள் (Amur Falcons)**

✓ அமுர் பருந்துகளுக்கு அப்பால் செல்லுதல்: நாகாலாந்து மாநிலம், பறவைகளின் பன்முகத்தன்மையைக் கொண்டாடவும், அவற்றின் கணக்கெடுப்பை நடத்தவும் தயாராக உள்ளது.

✓ நாகாலாந்து மாநிலத்தை உலக பறவை வரைபடத்தில் இடம் பெயரச் செய்த புலம்பெயர் பறவையான அமுர் பருந்துகளுக்கு அப்பால் செல்லும் முதல் பறவை ஆவணமாக்கல் பயிற்சியை நாகாலாந்து மேற்கொள்கிறது.

✓ வோகா மாவட்டத்தில் ஆதிக்கம் செலுத்தும் நாகா சமூகமான லோதாஸின் அறுவடைக்குப் பிந்தைய டோக் எமோங் திருவிழாவுடன் வெள்ளிக் கிழமை முதல் நான்கு நாட்கள் டோகு எமோங் பறவை கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. இந்த இடம் அமுர் பருந்துகள் கிழக்கு ஆசியாவிலிருந்து தென்னாப்பிரிக்காவிற்கு பயணிக்கும்போது அவற்றின் மிகவும் விருப்பமான நிறுத்தமாக விளங்குகிறது.

➢ **டிஎம்எச் (DMH)-11**

✓ இது ஒரு புதிய வகை கலப்பின கடுகு ஆகும்.

✓ மரபணு மாற்றப்பட்ட தாவரங்கள் மற்றும் உணவுப் பொருட்களின் இந்தியாவின் உச்சக் கட்டுப்பாட்டாளரான மரபணு பொறியியல் மதிப்பீட்டுக் குழு (), தாரா கடுகு காப்பினம் 11 இன் சுற்றுச் சூழல் வெளியிட்டிற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

➢ **ஓவர்ஹவுசர் மேக்னடோமீட்டர் (Overhauser Magnetometer)**

✓ மும்பையைச் சேர்ந்த இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் ஜியோமேக்னடிசத்தின் ஆராய்ச்சியாளர்கள் - நாட்டின் முதல் ஓவர் ஹவுசர் மேக்னடோ மீட்டரை ஒருவாக்கியுள்ளனர்.

✓ புதிய சென்சார் அலிபாக் காந்த ஆய்வகத்தில் நிறுவப்பட்டுள்ளது. இது நாட்டின் முதல் புவி காந்த ஆய்வகமாகும்.

✓ ஓவர் ஹவுசர் மேக்னடோமீட்டர் என்பது தொடர்ச்சியான புவி காந்தப்புல அளவீடுகளைப் பெறுவதற்கான காந்தப்புல ஆய்வுகளை மேற்கொள்வதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு முக்கிய கருவியாகும்.

➢ **ஃபால்கன் ஹெவி (Falcon Heavy)**

✓ எலோன் மஸ்கின் ஸ்பேஸ் எக்ஸ் - ஃபால்கன் ஹெவி, உலகின் மிக சக்தி வாயந்த ராக்கெட்டை விண்ணில் செலுத்தியது.

- ✓ நவம்பர் 1ஆம் தேதி, ஃபால்கன் ஹெவி, இரண்டு செயற்கைக் கோள்களைச் சுமந்து கொண்டு புளோரிடாவில் உள்ள நாசாவின் கென்னடி விண்வெளி மையத்தில் இருந்து புறப்பட்டது.
- ✓ மிலேனியம் ஸ்பேஸ் சிஸ்டம்ஸ் உருவாக்கிய டெட்ரா-1 மிலிட்டரி மைக்ரோ-செயற்கைக்கோள் முன்மாதிரியை ஏவுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

### ➢ சந்திர கிரகணம்

- ✓ நவம்பர் 8 அன்று, இந்தியா - இந்த ஆண்டு இரண்டாவது முறையாக முழு சந்திர கிரகணத்தைக் கண்டது. இதற்கு முன்பாக மே மாதத்தின் நடுப்பகுதியில் சந்திர கிரகணம் ஏற்பட்டது.
- ✓ மார்ச் 14, 2025 வரை இந்தியாவில் காணக்கூடிய கடைசி முழு சந்திர கிரகணம் இதுவாகும்.
- ✓ சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையில் பூமி வரும்போது, பூமியின் நிகழல் முழு சந்திரனையும் மூடும்போது முழு சந்திர கிரகணம் ஏற்படுகிறது.
- ✓ பொதுவாக சந்திர கிரகணத்திற்கு முன்பாக சூரிய கிரகணம் ஏற்படும்போது, மொத்த சந்திர கிரகணங்கள் சராசரியாக 1.5 ஆண்டுகளுக்கு ஒரு முறை நிகழும்.

### ➢ அபிஸ் கரிஞ்சோடியன் (Apis karinjodian)

- ✓ மேற்கு தொடர்ச்சி மலையில் புதிய தேனீ இனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. புதிய இனத்திற்கு 'அபிஸ் கரிஞ்சோடியன்' என்று பெயரிடப்பட்டுள்ளது. இதன் பொதுவான பெயர் இந்திய கருப்பு தேனி ஆகும்.
- ✓ 200 ஆண்டுகளுக்கும் மேலான இடைவெளிக்குப் பிறகு, மேற்கு தொடர்ச்சி மலையில் புதி தேனி இனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- ✓ இந்த அபிஸ் கரிஞ்சோடியன், ஐயுசிஎன் சிவப்பு பட்டியலில் 'அழிவின் விளிம்பில் உள்ளது' என்று வகைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த கண்டுபிடிப்புக்குப் பிறகு, உலகில் உள்ள மொத்த தேனி இனங்களின் எண்ணிக்கை 11 ஆக உயர்ந்துள்ளது.

### ➢ ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ் (Skyroot Aerospace)

- ✓ விண்வெளி தொழில்நுட்ப தொடக்கநிலை நிறுவனமாகிய ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ் - நவம்பர் 12 மற்றும் 16க்கு இடையில் இந்தியாவின் முதல் தனியாரால் உருவாக்கப்பட்ட ராக்கெட் - விக்ரம் எஸ் - ஐ விண்வெளிக்கு அனுப்புவதன்மூலம் வரலாறு படைக்க உள்ளது.
- ✓ ஸ்கைரூட்டின் முதல் பணியான 'பிராரம்ப் (ஆரம்பம்)' மூன்று வாடிக்கையாளர் பேலோடுகளை சுமந்து கொண்டு ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து ஏவப்படும்.
- ✓ இந்தப் பணியின்மூலம், ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ் நிறுவனம், இந்தியாவில் ராக்கெட்டை விண்ணில் செலுத்தும் முதல் தனியார் விண்வெளி நிறுவனமாக மாற உள்ளது.

### ➢ சூடோஹெலிக் அண்ணாமலை (Pseudohelice annamalai)

- ✓ ஆராய்ச்சியாளர்கள் - கடலூர் மாவட்டம், வெள்ளாற்றின் முகத்துவாரம் அருகே உள்ள பரங்கிப்பேட்டை சதுப்பு நிலத்தில் புதிய வகை கழிமுக நண்டு இனத்தைக் கண்டுபிடித்துள்ளனர்.
- ✓ அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் கல்வி மற்றும் ஆராய்ச்சியில் 100 ஆண்டு கால சேவையை அங்கீகரிக்கும் வகையில் இதற்கு 'சூடோஹெலிக் அண்ணாமலை' என்று பெயரிடப்பட்டுள்ளது.
- ✓ இந்த சமீபத்திய கண்டுபிடிப்பு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் கடல் உயிரியலில் உள்ள மேம்பட்ட ஆய்வுகள் மையத்தைச் (Centre of Advanced Studies) சேர்ந்த

விஞ்ஞானிகளுக்கு பெருமை சேர்த்தது. அவர்களுடன் தைவானின் நேஷனல் சுங் ஹ்சிங் பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர்களும் இணைந்தனர்.

- ✓ பெருங்கடல்கள், கடல்கள், ஆறுகள் அல்லது ஏரிகள் என பல்வேறு வகையான கடல் சுற்றுச்சூழல் அமைப்புகளில் நண்டுகள் உயிர்வாழ முடியும் என்றபோதிலும், இது ஒரு முகத்துவாரத்தின் அருகே காணப்பட்டதால், இது ஒரு கழிமுக நண்டு என்று வகைப்படுத்தப்பட்டுள்ளது.

## ➢ ஆர்ட்டெமிஸ் (Artemis)-1

- ✓ நாசா – பல மாதங்கள் தாமதம் மற்றும் பல தோல்வியுற்ற முயற்சிகளுக்குப் பிறகு சந்திரனுக்கு ஆர்ட்டெமிஸ்-1 பணியை ஏவியுள்ளது.
- ✓ கேப் கனாவரலில் உள்ள நாசாவின் கென்னடி விண்வெளி மையத்தில் இருந்து 32 அடுக்கு உயர விண்வெளி ஏவுதள அமைப்பானது, ராக்கெட் ஓரியன் குழுவினர் காப்ஸ்யூலுடன் ஏவப்பட்டது.
- ✓ ஏவப்பட்ட சுமார் 90 நிமிடங்களுக்குப் பிறகு, ராக்கெட்டின் மேல்நிலை வெற்றிகரமாக ஓரியன் கேப்சூலை பூமியின் சுற்றுப் பாதையிலிருந்து வெளியேற்றி அதன் பாதையில் சந்திரனை நோக்கி செலுத்தியது.
- ✓ மனிதர்களுக்காக இதுவரை உருவாக்கப்பட்ட எந்த விண்கலத்தையும்விட ஓரியன் விண்கலம் வேகமாகப் பறக்கும்.

## ➢ பாராஸ்ட்ரோனாட் (Parastronaut)

- ✓ நவம்பர் 23 அன்று, ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் - மாற்றுத் திறனாளிகளை விண்வெளியில் வேலைசெய்யவும், வாழவும் அனுமதிக்கும் ஒப்புதலைக் குறிக்கும் வகையில் முதல் 'பாராஸ்ட்ரோனாட்' என்று பெயரிட்டது.
- ✓ ஆங்கிலேய முன்னாள் பாராலிம்பிக் ஸ்ப்ரிண்டர் ஜான் மெக்பால், விண்வளி வீரர் பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்ட 17 பேர் கொண்ட புதிய தலைமுறையின் ஒரு பகுதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- ✓ 41 வயதான மெக்பால், 2009க்குப் பிறகு முதல் முறையாக ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் தனது புதிய விண்வெளி வீரர்களின் தரவரிசையை அறிவித்த பிறகு, ஐந்து புதிய தொழில்முறை விண்வெளி வீரர்கள் மற்றும் 11 உபரி நபர்கள் பயிற்சியில் சேருவார்.

## ➢ PSLV-C54/EOS-06

- ✓ இஸ்ரோ பிஎஸ்எல்வி – சி54-ஈஓஎஸ்-06 திட்டத்தை நவம்பரில் ஏவ உள்ளது.
- ✓ இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் பிஎஸ்எல்வி-சி54-ஈஓஎஸ் -06 திட்டத்தை ஓஷன்ஸ்-3 மற்றும் எட்டு நானோ செயற்கைக் கோள்களுடன் ஸ்ரீஹரிகோட்டா விண்வெளி விண்கலத்திலிருந்து விண்ணில் செலுத்த உள்ளது.
- ✓ இந்திய விண்வெளி முகமையின் விக்ரம் சாராபாய் விண்வெளி மையம் ஒருங்கிணைந்த பிரதான பாராசூட் ஏர் டிராப் சோதனையை (Integrated main parachute airdrop test ) நடத்தியது.

## ➢ சிஎஸ்ஐஆர் - தேசிய புவி இயற்பியல் ஆராய்ச்சி நிறுவனம்

- ✓ சிஎஸ்ஐஆர் அமைப்பின் என்ஜிஆர்ஐ, இமயமலை மாநிலங்களில் வெள்ளம், பாறை சரிவுகள் மற்றும் பனிச் சரிவுகளுக்கு எதிராக முன்கூட்டியே எச்சரிக்கை அமைப்பை நிறுவ உள்ளது.

- ✓ பெரிய மற்றும் திடீர் வெள்ளம், பாறை சரிவுகள், நிலச்சரிவுகள், பனிப்பாறை ஏரி வெடிப்புகள் மற்றும் பனிச்சரிவுகள் ஆகியவற்றுக்கு எதிராகவும், எதிர்காலத்தில் சாமோலி வகையான பேரழிவுகளைத் தடுக்கும் வகையிலும், இமயமலை மாநிலங்களில் முன்கூட்டியே எச்சரிக்கை அமைப்பை ஏற்படுத்துவதற்கான கள ஆய்வுகளை அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி கவுன்சிலின் தேசிய புவி இயற்பியல் ஆராய்ச்சி நிறுவனம் தொடங்கியுள்ளது.

## ➢ சைபீரியன் ரூபித்ரோட் (Siberian Rubythroat)

- ✓ ஒரு அரிய குளிர்கால புலம்பெயர்ந்த சைபீரியன் ரூபித்ரோட் (கலியோப் பலியோப்) நீலகிரியில் பதிவு செய்யப்பட்டுள்ளது.
- ✓ சைபீரியாவின் ஊசியிலை காடுகளில் இனப்பெருக்கம் செய்யும் இந்தப் பறவையானது, தாய்லாந்து, இந்தியா, இந்தோனேசியா மற்றும் வங்காளதேசம் ஆகிய நாடுகளுக்கு குளிர் காலத்தில் வருகை தருவதாக அறியப்படுகிறது.

## ➢ ரோகினி ஆர்எச் 200 சவுண்டிங் ராக்கெட் (Rohini RH200 Sounding Rocket)

- ✓ இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம், ஆர்எச் 200 ஒலி எழுப்பும் ராக்கெட்டை வெற்றிகரமான 200வது முறையாக புதன்கிழமை தும்பாவில் இருந்து விண்ணில் செலுத்த முயல்கிறது.
- ✓ இஸ்ரோவின் ஏவுகணை வாகனங்கள் தொடர்பான முன்னணி பிரிவான விக்ரம் சாராபாய் விண்வெளி மையத்தில் முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த், ஏவுகணையை பார்வையிட உள்ளார். வெளியீட்டுச் சாளரம் காலை 11 மணி முதல் நண்பகல் வரை இருக்கும் என்று விக்ரம் சாராபாய் விண்வெளி நிலைய அதிகாரி ஒருவர் திங்களன்று கூறினார்.

## ➢ பிஎஸ்எல்வி -சி 54

- ✓ நவம்பர் 26 அன்று, இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம், ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்திலிருந்து தனது வரலாற்றுச் சிறப்பு மிக்க பிஎஸ்எல்வி-சி54 விண்கலத்தை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது.
- ✓ இது இந்தியாவிலிருந்து பிஎஸ்எல்வியின் 56வது விமானம் மற்றும் 2022ஆம் ஆண்டில் வாகனத்தின் ஐந்தாவது மற்றும் இறுதி ஏவுதல் ஆகும்.
- ✓ இஸ்ரோ மொத்தம் ஒன்பது செயற்கைக்கோள்களை விண்வெளியில் பல சுற்றுப் பாதைகளில் செலுத்தியது. இதில் முதன்மை செயற்கைக் கோள் இஓஎஸ்-06 மற்றும் எட்டு நானோ செயற்கைக்கோள்களை தனியார் நிறுவனங்கள் மற்றும் இந்தியா மற்றும் பூட்டான் நாடுகள் இணைந்து உருவாக்கியுள்ளன.

## ➢ அக்னிகுல் (Agnikul)

- ✓ சென்னையைத் தலைமையிடமாகக் கொண்ட விண்வெளி தொழில்நுட்ப தொடக்க நிலை நிறுவனமாகிய அக்னிகுல், ஸ்ரீஹரிகோட்டாவில் தனியார் ஏவுகணை வாகனத்திற்கான இந்தியாவின் முதல் ஏவுதளத்தை நிறுவியுள்ளது.
- ✓ 'தனியார் ஏவுகணை வாகனத்திற்கான முதல் பிரத்யேக ஏவுதளம் சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் உள்ளது. இப்போது, இந்தியா மேலும் ஒரு தளத்தில் இருந்து விண்வெளிக்கு பயணிக்க முடியும். அக்னிகுல்-க்கு நன்றி'
- ✓ அக்னிகுல் வடிவமைத்து, இஸ்ரோ மற்றும் இந்திய தேசிய விண்வெளி ஊக்குவிப்பு மற்றும் அங்கீகார மையம் ஆகியவற்றின் ஆதரவுடன் செயல்படுத்தப்பட்ட இந்த வசதியானது, இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது: அவை அக்னிகுல் ஏவுதளம் மற்றும் அக்னிகுல் மிஷன் கட்டுப்பாட்டு மையம் ஆகும்.

- **எம்பாக்ஸ் (Mpox)**

- ✓ குரங்கு அம்மை என்ற வார்த்தை இனவெறியைத் தூண்டி நோயாளிகளை இழிவுபடுத்துவதாகப் புகார்கள் வந்ததால், உலக சுகாதார நிறுவனம் குரங்கு அம்மை (Monkeypox) நோயின் பெயரை எம்அம்மை (Mpox) என மாற்றியுள்ளது. ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் சுமார் ஆறு மாதங்களுக்கு முன்பே தொடங்கிய நோய்க்கிளர்ச்சிகளைத் தொடர்ந்து இந்தப் பரிந்துரை வழங்கப்பட்டுள்ளது.
- ✓ உலக சுகாதார நிறுவனம் அதன் தகவல் தொடர்புகளில் எம்பாக்ஸ் என்ற சொல்லை ஏற்றுக் கொள்ளும் மற்றும் இந்த பரிந்துரைகளைப் பின்பற்ற மற்றவர்களை ஊக்குவிக்கும்.
- ✓ தற்போதைய பெயரின் எதிர்மறையான தாக்கத்தைக் குறைப்பதற்காகவும், புதிய பெயரை ஏற்றுக் கொள்வதற்காகவும் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

APPOLO STUDY CENTRE

# விளையாட்டுகள்

➢ **ஆசிய ஸ்குவாஷ் அணி சாம்பியன்ஷிப்**

✓ ஸ்குவாஷ் போட்டியில், இந்திய ஆண்கள் அணி, 4 நவம்பர் 2022 அன்று ஆசிய ஸ்குவாஷ் டீம் சாம்பியன்ஷிப் போட்டியில் முதல் தங்கத்தை வென்றது.

✓ தென்கொரியாவின் சியோங்ஜுவில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் அந்த அணி குவைத்தை நேர் செட்களில் தோற்கடித்தது.

✓ 2014 ஆசிய விளையாட்டுப் போட்டியில் தங்கம் வென்ற பிறகு இந்திய ஆண்கள் அணி பெற்ற மிகப்பெரிய வெற்றி இதுவாகும்.

➢ **ஐசிஐசிஐ டி20 உலகக் கோப்பை**

✓ நவம்பர் 13 அன்று, ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரின் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற ஐசிஐசிஐ டி20 உலகக் கோப்பைப் போட்டியில், இங்கிலாந்து அணி, 5 விக்கெட் வித்தியாசத்தில் பாகிஸ்தானைத் தோற்கடித்து கோப்பையை வென்றது.

✓ இந்த வெற்றியின்மூலம் 2010ஆம் ஆண்டு வெற்றிக்குப் பிறகு, உலகக் கோப்பையை 2வது முறையாக கைப்பற்றிய இரண்டாவது அணி என்ற பெருமையை இங்கிலாந்து பெற்றது.

✓ கிரிக்கெட் வரலாற்றில் ஒரு நாள் மற்றும் டி20 உலகக் கோப்பைகள் இரண்டையும் ஒரே நேரத்தில் பெற்ற முதல் அணி என்ற பெருமையை இங்கிலாந்து பெற்றது.

➢ **மனிகா பத்ரா**

✓ நட்சத்திர துடுப்பாட்ட வீராங்கனை மனிகா பத்ரா – நவம்பர் 19 அன்று பாங்காக்கில் உள்ள ஹுவா மாக் உள் விளையாட்டு அரங்கில் வெண்கலப் பதக்கத்துடன் ஆசிய கோப்பை டிடி டேபிள் டென்னிஸ் போட்டியை முடித்த முதல் இந்திய பெண் டேபிள் டென்னிஸ் வீராங்கனை என்ற வரலாற்றைப் படைத்தார்.

✓ வெண்கலத்திற்கான போட்டியில், தரவரிசையில் இடம் பெறாத மனிகா, உலகின் 6ம் நிலை வீராங்கனையான ஜப்பானின் ஹினா ஹயாடாவை வீழ்த்தி சாதனை படைத்தார்.

➢ **N. ஜெகதீசன்**

✓ தமிழ்நாட்டின் விக்கெட் கீப்பரும் பேட்டிங் வீரருமான என். ஜெகதீசன் - தொடர்ந்து ஐந்து ஏ. சதங்களை அடித்த உலகின் முதல் வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

✓ நவம்பர் 21 அன்று, பெங்களூரில் உள்ள எம். சின்னசாமி விளையாட்டரங்கத்தில் விஜய் ஹசாரே டிராபியில், அருணாசலப் பிரதேசத்திற்கு எதிரான எலைட் குரூப் சி போட்டியின் 6வது சுற்றில் தமிழக தொடக்க ஆட்டக்காரர் என். ஜெகதீசன் 141 பந்துகளில் 277 ரன்களை எடுத்தார்.

✓ இதற்கு முன்னதாக, 2014-15இல் குமார் சங்கக்கரா, 2015-16இல் அல்விரோ பீட்டர்சன் மற்றும் 2020-21இல் தேவ்தத் படிக்கல் ஆகிய மூன்று வீரர்கள் மட்டுமே தொடர்ச்சியாக நான்கு சதங்களை அடித்துள்ளனர்.

➢ **FIFA உலகக் கோப்பை**

✓ 22வது ஃபிஃபா உலகக் கோப்பைப் போட்டிகள் - நவம்பர் 20 முதல் டிசம்பர் 18 வரை கத்தாரில் நடைபெற்றன.

✓ ஃபிஃபா உலகக் கோப்பைப் போட்டியை அரபு நாடுகள் நடத்துவது இதுவே முதல் முறை ஆகும்.

- ✓ மதிப்பு மிக்க இந்த விளையாட்டுப் போட்டியை நடத்தும் முதல் மத்திய கிழக்கு நாடாகவும், ஆசியாவில் ஜப்பான் மற்றும் தென்கொரியாவிற்கு அடுத்த நாடாகவும் கத்தார் விளங்குகிறது.

➢ **கிறிஸ்டியானோ ரொனால்டோ**

- ✓ நவம்பர் 24 அன்று, போர்ச்சுகலின் கிறிஸ்டியானோ ரொனால்டோ – ஐந்து உலகக் கோப்பைப் போட்டிகளில் கோல் அடித்த முதல் மனிதர் ஆனார்.
- ✓ கத்தாரில் நடைபெற்று வரும் ஃபிஃபா உலகக் கோப்பை 2022 போட்டிகளில் கானாவை போர்ச்சுகல் 3-2 என்ற கோல் கணக்கில் வென்றதில் பெனால்டி ஸ்பாட் மூலம் தொடக்க கோலை அடித்ததைத் தொடர்ந்து அவர் இந்த சாதனையைப் படைத்தார்.
- ✓ நான்கு உலகக் கோப்பைப் போட்டிகளில் அடித்த பீலே மற்றும் ஜெர்மனியின் உவே சீலர் மற்றும் மிரோஸ்வாபவ் க்ளோஸ் ஆகியோரை ரொனால்டோ முந்தினார்.

➢ **பி.டி. உஷா**

- ✓ பழம்பெரும் ஓட்டப்பந்தய வீராங்கனை பி.டி. உஷா - இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் 95 ஆண்டுகால விளையாட்டு அமைப்பு வரலாற்றில் முதல் பெண் தலைவராகப் பதவியேற்க உள்ளார்.
- ✓ டிசம்பர் 10ஆம் தேதி தேர்தல் நடைபெறும் தேசிய ஒலிம்பிக் கமிட்டியின் தலைவராக, முதல் ஒலிம்பிக் பதக்கம் வென்றவரும் மற்றும் சர்வதேச பதக்கம் வென்றவருமாகிய உஷா விளங்குகிறார்.
- ✓ 58 வயதான, பல ஆசியாப் போட்டிகளில் தங்கப் பதக்கம் வென்ற இவர் ஒருவரே, இந்திய ஒலிம்பிக் சங்க தலைவர் பதவிக்கு விண்ணப்பம் சமர்ப்பித்த நபர் ஆவார்.

➢ **ருதுராஜ் கெய்க்வாட் (Ruturaj Gaikwad)**

- ✓ மகாராஷ்டிர அணியின் தலைவரும் தொடக்க ஆட்டக்காரருமான ருதுராஜ் கெய்க்வாட் - ஒரு ஓவரில் தொடர்ச்சியாக ஏழு சிக்சர்களை அடித்த உலகின் முதல் பேட்ஸ்மேன் ஆனார்.
- ✓ நவம்பர் 28 அன்று உத்தரப் பிரதேசத்திற்கு எதிரான விஜய் ஹசாரே கோப்பை காலிறுதியில் அகமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி மைதானத்தில் அவர் இந்த சாதனையை நிகழ்த்தினார்.
- ✓ உத்தரப் பிரதேசத்தில் இடது கை சுழற்பந்து வீச்சாளராகிய ஷிவா சிங் வீசிய கடைசி ஓவரில் கெய்க்வாட் இந்த சாதனையை நிகழ்த்தினார். அவர் அந்த ஓவரின் ஐந்தாவது பந்து வீச்சில் நோ-பாலை விட்டுக் கொடுத்தார்.

➢ **ஸ்டெஃபானி ஃப்ராபர்ட் (Stephanie Frappart)**

- ✓ ஆடவர் உலகக் கோப்பைப் போட்டியின் முதல் பெண் நடுவராக பிரான்ஸ் வீராங்கனை ஸ்டெஃபானி ஃப்ராபாட் ஆனார்.
- ✓ ஃபிஃபா உலகக் கோப்பை வரலாற்றில் ஆடவர் போட்டியில் இறுதிப் போட்டிக்கு நடுவராகப் பொறுப்பேற்ற முதல் பெண்மணி என்ற பெருமையை பிரானஸ் நாட்டைச் சேர்ந்த ஸ்டெஃபானி ஃப்ராபர்ட் 2022 டிசம்பர் 1ஆம் தேதி அல் பேட் விளையாட்டு மைதானத்தில் கோஸ்டாரிகா அணியை எதிர்கொள்ளும்போது வரலாறு படைக்கப்படும்.

# இரங்கல் செய்திகள்

- **ஜாம்ஷெட் ஜே இராணி**
  - ✓ இந்தியாவின் உருக்கு மனிதர் என்று அழைக்கப்படும் ஜாம்ஷெட் ஜே. இராணி ஜாம்ஷெட்பூரில் காலமானார்.
  - ✓ உலோகவியல் துறையில் அவர் ஆற்றிய சேவைகளைப் பாராட்டி 2008 ஆம் ஆண்டு அவருக்கு அரசாங்கத்தால் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.
  - ✓ 1990களின் முற்பகுதியில் இந்தியாவின் பொருளாதார தாராளமயமாக்கலின்போது டாடா ஸ்டீலை அவர் முன்னணியில் இருந்து வழிநடத்தினார். மேலும், இந்தியாவில் எஃகு தொழில்துறையின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கும் அவர் பங்களித்தார்.

- **எலா பட்**
  - ✓ பெண்கள் உரிமை ஆர்வலரும் சேவா நிறுவனருமான எலா பட் காலமானார்.
  - ✓ புகழ்பெற்ற பெண்கள் உரிமை ஆர்வலரும், சுயதொழில் பெண்கள் சங்கத்தின் (Self Employed Women's Association -SEWA) நிறுவனருமான எலா பட் 2 நவம்பர் 2022 அன்று காலமானார்.
  - ✓ 1972இல் பட் என்பவரால் நிறுவப்பட்ட இந்த சேவை அமைப்பு, பெண்களுக்காக வேலை செய்யும் மிகப்பெரிய கூட்டுறவு நிறுவனங்களில் ஒன்றாகும். இதில் 18 மாநிலங்களில் இருந்தும் இரண்டு மில்லியனுக்கும் அதிகமான உறுப்பினர்கள் உள்ளனர்.
  - ✓ அவருக்கு 1985இல் பத்மஸ்ரீ மற்றும் 1986ல் பத்ம பூஷன் விருதுகள் வழங்கப்பட்டன.

- **ஷியாம் சரன் நேகி**
  - ✓ இந்தியாவின் முதல் வாக்காளராகிய ஷியாம் சரண் நேகி நவம்பர் 5, 2022 சனிக்கிழமை அனறு இமாசலப் பிரதேசத்தின் கின்னூரில் உள்ள அவரது இல்லத்தில் காலமானார்.
  - ✓ அவருக்கு வயது 106.
  - ✓ 1952 பொதுத் தேர்தலில் முதல் வாக்காளராக நம்பப்பட்ட நேகி 1917ஆம் ஆண்டு ஜூலை 1 ஆம் தேதி பிறந்தார். அதிகாரபூர்வ பதிவுகளின்படி அவர் பள்ளி ஆசிரியராக ஓய்வு பெற்றார்.

- **அவ்வை நடராஜன்**
  - ✓ புகழ்பெற்ற தமிழறிஞரும், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தருமான அவ்வை நடராஜன் (86 வயது) – சென்னையில் நவம்பர் 21ஆம் தேதி காலமானார்.
  - ✓ சிறந்த தமிழ்ப் பேச்சாளரும் எழுத்தாளருமான நடராஜன் வள்ளலார், பாரதி, கம்பர் மற்றும் முன்னாள் முதல்வர் சி.என். அண்ணாதுரை பற்றிய பல புத்தகங்களை வெளியிட்டுள்ளார்.
  - ✓ மு. கருணாநிதி 1974இல் முதல்வராக இருந்தபோது தமிழக அரசின் தகவல் மற்றும் மக்கள் தொடர்புத் துறைக்கு திரு. நடராஜன் கொண்டு வரப்பட்டார்.

# அறிக்கைகள்

## ➢ உலக காலநிலை அறிக்கை (State of the Global Climate Report) 2022

- ✓ நவம்பர் 6 அன்று, உலக வானிலை ஆய்வுத்துறை – எகிப்தில் ஷர்ம் எல்-ஷேக்கில் நடைபெற்ற UNFCCC இன் 27வது நாடுகளின் மாநாட்டில் ‘உலக காலநிலை அறிக்கை 2022’ஐ வெளியிட்டது.
- ✓ உலக காலநிலை 2022இன் ‘உலக வானிலை ஆய்வுத் துறை தற்காலிக நிலை’ என்ற தலைப்பிலான அறிக்கையின்படி, 2022ஆம் ஆண்டிற்கான உலகளாவிய சராசரி வெப்பநிலை தொழில்துறைக்கு முந்தைய காலத்தை விட தற்போது 1.15 டிகிரி செல்சியஸ் அதிகமாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.
- ✓ உலக வானிலை ஆய்வுத் துறையின் கூற்றுப்படி, 2022ஆம் ஆண்டு 1850 முதல் பதிவாகிய ஐந்தாவது அல்லது ஆறாவது வெப்பமான ஆண்டாக இது இருக்கும்.
- ✓ 2022க்கான தற்போதைய மதிப்பீடு, உலக வானிலை ஆய்வுத் துறை ஒவ்வொரு ஆண்டும் வெளியிடும் உலகளாவிய காலநிலை அறிக்கையின் ஒரு பகுதியாகும். இந்த ஆண்டுக்கான இறுதி அறிக்கை அடுத்த ஆண்டு ஏப்ரலில் மட்டுமே வெளியிடப்படும்.
- ✓ மூன்று முக்கிய பசுமை இல்ல வாயுக்களான கார்பன் டை ஆக்சைடு, மீத்தேன் மற்றும் நைட்ரஜ் ஆக்சைடு ஆகியவற்றின் செறிவுகள் அனைத்தும் 2021இல் அதிகபட்சமாக இருந்ததையும் இந்த அறிக்கை சுட்டிக் காட்டியது.
- ✓ இந்த அறிக்கையின்படி, கடல் மட்ட உயர்வு விகிதம் 1993இல் இருந்து இரட்டிப்பாகியுள்ளது. ஜனவரி 2020 முதல் கிட்டத்தட்ட 10 மிமீ உயர்ந்து இந்த ஆண்டு புதிய சாதனையை எட்டியுள்ளது.

## ➢ உலகளாவிய கார்பன் திட்ட அறிக்கை (Global Carbon Project Report)

- ✓ உலகளாவிய கார்பன் திட்ட அறிக்கையின்படி, 2022இல் உலகளாவிய கார்பன் உமிழ்வுகள் - குறைவதற்கான அறிகுறிகள் ஏதுமில்லாமல் சாதனை அளவிலேயே உள்ளது.
- ✓ தற்போதைய உமிழ்வு அளவுகள் நீடித்தால், ஒன்பது ஆண்டுகளில் புவி வெப்பமடைதல் 1.5 டிகிரி செல்சியசைத் தாண்டுவதற்கான வாய்ப்புகள் 50 விழுக்காடு உள்ளது என்று இந்த அறிக்கை கணித்துள்ளது.
- ✓ அதே சமயம் 2021ஆம் ஆண்டு உமிழ்வுடன் ஒப்பிடும்போது, முக்கிய நாடுகளில், சீனாவில் (0.9 விழுக்காடு) மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தில் (0.8 விழுக்காடு) உமிழ்வு குறையும் என்று கணிக்கப்பட்டுள்ளது. அதே சமயம் இந்த ஆண்டு அமெரிக்கா (1.5 விழுக்காடு) மற்றும் இந்தியாவில் (6 விழுக்காடு) அதிகரிக்கும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.
- ✓ எப்படியிருந்தபோதிலும், அமெரிக்கா, சீனா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் 27 போன்ற மற்ற பெரிய உமிழ்ப்பாளர்களுடன் ஒப்பிடுகையில், இந்தியாவின் தனிநபர் உமிழ்வு தொடர்ந்து குறைவாகவே உள்ளது.
- ✓ 2022ஆம் ஆண்டில் 40.6 பில்லியன் டன்களாக உள்ள கார்பன் டை ஆக்சைடு உமிழவானது, இது வரை உள்ள ஆண்டுகளிலேயே மிகவும் அதிகமான, 2019ஆம் ஆண்டின் 40.9 டன்கள் கார்பன் டை ஆக்சைடு உமிழ்வுக்கு மிக அருகில் உள்ளது என்று புதிய அறிக்கை மதிப்பிடுகிறது.
- ✓ நிலக்கரி மற்றும் எண்ணெயில் இருந்து திட்டமிடப்பட்ட உமிழ்வுகள் அவற்றின் 2021ஆம் ஆண்டின் அளவை விட அதிகமாக உள்ளன. மொத்த உமிழ்வு அதிகரிப்புக்கு எண்ணெய் மிகப்பெரிய பங்களிப்பை வழங்குகிறது.

## ➢ உலக மக்கள் தொகை மதிப்பீடு 2022

- ✓ உலக மக்கள் தொகை – 2022 உலக மக்கள் தொகை மதிப்பீட்டின்படி, நவம்பர் 15 அன்று 8 பில்லியனைத் தாண்டும்.
- ✓ உலக அளவில், 8 பில்லியன் மக்கள் தொகை மைல்கல் என்பது கடந்த 11 ஆண்டுகளில் பூமியில் சேர்க்கப்பட்ட 1 பில்லியன் மக்களைக் குறிக்கிறது.
- ✓ இதே நிலையில் உலக மக்கள் தொகை ஒன்பது பில்லியனை எட்டுவதற்கு தோராயமாக இன்னும் 15 ஆண்டுகள் ஆகலாம். அல்லது 2037இல் இந்த நிலையை எட்டலாம்.
- ✓ உலக மக்கள் தொகை 2030இல் 8.5 பில்லியனாக இருக்கும் என்றும், 2050இல் 9.7 பில்லியனாக இருக்கும் என்றும், 2100ஆம் ஆண்டில் 10.4 பில்லியனாக வளரக் கூடும் என்றும் ஐக்கிய நாடுகளின் கணிப்புகள் தெரிவிக்கின்றன.
- ✓ 2011 முதல், இந்தியா சுமார் 180 மில்லியன் மக்களைச் சேர்க்கிறது. மேலும், அடுத்த ஆண்டில் உலகின் அதிக மக்கள் தொகை கொண்ட நாடாக சீனாவை விஞ்சி விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- ✓ சீனாவின் 1.426 பில்லியன் மக்கள் தொகையுடன் ஒப்பிடுகையில், 2022இல் இந்தியாவின் மக்கள் தொகை 1.412 பில்லியனாக உள்ளது. 2050ஆம் ஆண்டில் இந்தியாவின் மக்கள் தொகை 1.668 பில்லியனாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இது இந்த நூற்றாண்டின் நடுப்பகுதியில் சீனாவின் 1.317 பில்லியன் மக்கள் தொகையை விட அதிகம் ஆகும்.
- ✓ சீனாவும் இந்தியாவும் சேர்ந்து 1.4 பில்லியனுக்கும் அதிகமான மக்கள் தொகையைக் கொண்டுள்ளன. இது உலக மக்கள் தொகையில் 17 விழுக்காட்டிற்கும் அதிகம் ஆகும்.

## ➢ ஆசியாவின் காலநிலை 2021

- ✓ நவம்பர் 14 அன்று, உலக வானிலை அமைப்பு மற்றும் ஆசியா மற்றும் பசிபிக் ஐ.நா பொருளாதார மற்றும் சமூக ஆணையம் (Economic and Social Commission for Asia and the Pacific) – 'ஆசியாவின் காலநிலை நிலை 2021' என்ற தலைப்பில் ஒரு புதிய அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- ✓ எகிப்தில் ஷர்ம் எல்-ஷேக்கில் காலநிலை மாற்றம் தொடர்பான ஐ.நா கட்டமைப்பு மாநாட்டில் 27வது கட்சிகளின் மாநாட்டில், இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.
- ✓ இந்த அறிக்கையின்படி, ஆசியாவில் குறைந்தது 48.3 மில்லியன் மக்கள் 100க்கும் மேற்பட்ட இயற்கை ஆபத்துகளால் பாதிக்கப்பட்டுள்ளனர். இது 2021ஆம் ஆண்டில் குறைந்தது 3,803 உயிர்களைப் பலிகொண்டுள்ளது.
- ✓ இந்த நிகழ்வுகளில் வறட்சி, தீவிர வெப்பநிலை, வெள்ளம், பனிப்பாறை ஏரி வெடிப்பு, நிலச்சரிவு, புயல் மற்றும் காட்டுத் தீ ஆகியவை அடங்கும்.

## ➢ பிரசவத்தின்போது தாய்மார்களின் இறப்பு வீதம் குறைவு (Decline in MMR)

- ✓ இந்தியாவில் கர்ப்பம் தொடர்பான பிரச்சினைகளால் இறக்கும் பெண்களின் எண்ணிக்கை 2014-16இல் ஒரு இலட்சத்துக்கு 130 என்ற எண்ணிக்கையில் இருந்து, 2018-20இல் ஒரு லட்சத்துக்கு 97 ஆகக் குறைந்துள்ளது.
- ✓ நாடு முழுவதும் 2018 மற்றும் 2020க்கு இடையில் பதிவு செய்யப்பட்ட தாய்மார்களின் இறப்பு மாதிரி கணக்கெடுப்பின் அடிப்படையில் இந்த கண்டுபிடிப்பு அமைந்துள்ளது.
- ✓ இந்த அறிக்கையின்படி, அஸ்ஸாம் 2018-20இல் 195ல் ஒரு இலட்சம் பிறப்பு விகிதத்தில் அதிக தாய் இறப்பு விகிதத்தைக் கொண்டுள்ளது.
- ✓ 173 தாய் இறப்பு விகிதத்துடன் மத்தியப் பிரதேசம் இரண்டாவது இடத்திலும், உத்தரப் பிரதேசம் (167) மூன்றாவது இடத்தையும் பிடித்துள்ளன. கேரளாவில் மிகக் குறைந்த தாய்மார்கள் இறப்பு விகிதம் (19) உள்ளது. அதற்கு அடுத்த நிலையில் மகாராஷ்டிரா (33) மற்றும் தெலுங்கானா (43) உள்ளன.

- ✓ உலக சுகாதார அமைப்பின் வழிகாட்டுதல்களின்படி, ஒரு பெண் கர்ப்பமாக இருக்கும்போது அல்லது கர்ப்பம் முடிவடைந்த 42 நாட்களுக்குள் கர்ப்பம் அல்லது அது தொடர்பான காரணங்களால் நிலைமை மோசமாகி மரணம் அடைந்தால் (ஆனால் அது தற்செயலான அல்லது தற்செயலான காரணங்களால் ஏற்பட்ட மரணமாக இருக்கக்கூடாது) அது கர்ப்பத்தின்போது ஏற்படும் மரணமாக கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

APOLLO STUDY CENTRE

# தரவரிசைப்பட்டியல்

- **காலநிலை மாற்ற செயல்திறன் குறியீடு (Climate Change Performance Index)**
- ✓ இந்தியா – குறைந்த உமிழ்வு மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் அதிகரித்து வரும் பயன்பாடு காரணமாக, காலநிலை மாற்ற செயல்திறன் குறியீடு 2023இல் இரண்டு இடங்கள் உயர்ந்து மொத்தம் உள்ள 63ல் எட்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.
- ✓ ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பிற நாடுகளின் காலநிலை செயல்திறனைக் கண்காணிக்கும் மூன்று சுற்றுச்சூழல் அரசு சாரா நிறுவனங்களால் நவம்பர் 14 அன்று இந்த அறிக்கை வெளியிடப்பட்டது.
- ✓ ஐ.நா காலநிலை மாற்ற மாநாட்டில் ஜெர்மன் வாட்ச், புதிய காலநிலை நிறுவனம் மற்றும் காலநிலை நடவடிக்கை நெட்வொர்க் ஆகிய அமைப்புகளால் ஒவ்வொரு ஆண்டும் இந்த தரவரிசைப் பட்டியல் வெளியிடப்படுகிறது.
- ✓ 2030ஆம் ஆண்டிற்குள் தங்கள் உமிழ்வை பாதியாகக் குறைக்க நாடுகள் எவ்வளவு சிறப்பாகச் செயல்படுகின்றன என்பதில் அவை கவனம் செலுத்துகின்றன – 1.5 டிகிரி செல்சியஸ் இலக்கை அடைதல் மற்றும் ஆபத்தான காலநிலை மாற்றத்தைத் தடுப்பதற்கான இன்றியமையாத அம்சம் இதுவாகும்.

- **நெட்வொர்க் தயார்நிலை குறியீடு (Network Readiness Index) 2022**
- ✓ இந்தியா – சமீபத்தில் வெளியிடப்பட்ட நெட்வொர்க் தயார்நிலை குறியீடு 2022 அறிக்கையின்படி, தனது நிலையை ஆறு இடங்கள் அளவுக்கு மேம்படுத்தி, இப்போது 61வது இடத்தில் உள்ளது.
- ✓ தொழில்நுட்பம், மக்கள், நிர்வாகம் மற்றும் தாக்கம் ஆகிய நான்கு வெவ்வேறு அளவுருக்களில் அவற்றின் செயல்திறன் அடிப்படையில் 131 நாடுகளின் நெட்வொர்க் அடிப்படையிலான தயார்நிலையை இந்த அறிக்கை கண்காணிக்கிறது.
- ✓ இந்த அறிக்கையின்படி, 2021இல் 49.74 ஆக இருந்த நாட்டின் ஒட்டு மொத்த மதிப்பெண் 2022இல் 51.19 ஆக உயர்ந்துள்ளது.

- **உலக அறிவுசார் சொத்து குறிகாட்டிகள் (World Intellectual Property Indicators) 2022**
- ✓ உலக அறிவுசார் சொத்து அமைப்பு – சமீபத்தில் உலக அறிவுசார் சொத்து குறிகாட்டிகள் 2022ஐ வெளியிட்டது.
- ✓ இந்த அறிக்கையின்படி, உலகெங்கிலும் உள்ள கண்டுபிடிப்பாளர்கள் 2021இல் 3.4 மில்லியன் காப்புரிமை விண்ணப்பங்களை தாக்கல் செய்தனர். இது முந்தைய ஆண்டை விட 3.6 விழுக்காடு அதிகமாகும்.
- ✓ இதில் இந்தியா மற்றும் சீனாவில் உள்ளூர் காப்புரிமை தாக்கல்கள் 5.5 விழுக்காடு வளர்ச்சி காரணமாக முதல் இடத்தில் உள்ளன. அதே சமயம் கொரியா குடியரசு (+2.5 விழுக்காடு) காப்புரிமை தாக்கல்களில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் காட்டிய மூன்றாவது ஆசிய நாடு ஆகும்.
- ✓ இந்தியாவில் இந்த ஆண்டில் 4,88,526 வர்த்தக முத்திரை விண்ணப்பங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இது 2020 உடன் ஒப்பிடும்போது 6.7 விழுக்காடு அதிகம் ஆகும்.

# முக்கிய தினங்கள்

| நாள் | தினம் | மையக் கருத்து |
|---|---|---|
| **நவம்பர் 01** | **உலக சைவ தினம்** | இந்த ஆண்டுக்கான மையக் கருத்து விலங்கு உரிமைகளை மையமாகக் கொண்ட பிரச்சாரத்தின் அடிப்படையில் 'எதிர்கால இயல்பு' என்பதாகும். |
| **நவம்பர் 01** | **மாநிலம் உருவாக்கப்பட்ட நாள்** | இந்தியாவில் ஏழு மாநிலங்கள் மற்றும் இரண்டு யூனியன் பிரதேசங்கள் நவம்பர் 1, 2022 அன்று தங்கள் நிறுவன தினத்தைக் கொண்டாடுகின்றன. அவை ஆந்திரப் பிரதேசம், ஹரியானா, சத்தீஸ்கர், கேரளா, கர்நாடகா, பஞ்சாப் மற்றும் மத்தியப் பிரதேசம், லட்சத்தீவு மற்றும் புதுச்சேரி ஆகும். |
| **நவம்பர் 01** | **சோஜிலா தினம்** | ட்ராஸ் அருகே உள்ள ஜோஜலா போர் நினைவிடத்தில் சோஜிலா தினம் அனுசரிக்கப்பட்டது. 1948இல் 'ஆபரேஷன் பைசன்' போது இந்திய துருப்புகள் வெளிப்படுத்திய துணிச்சலைக் கௌரவிக்கும் வகையில் இந்த நாள் அனுசரிக்கப்பட்டது. |
| **நவம்பர் 02** | **ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கான தண்டனையின்மையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான சர்வதேச தினம்** | மையக் கருத்து, 'ஜனநாயகத்தைப் பாதுகாக்க ஊடகங்களைப் பாதுகாத்தல்' என்பதாகும். இந்த ஆண்டின் முழக்கம் 'உண்மையை அறிவதே உண்மையைப் பாதுகாப்பதாகும்' என்பதாகும். |
| **நவம்பர் 05** | **உலக சுனாமி விழிப்புணர்வு தினம்** | சுனாமி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 5 ஆம் தேதி உலக சுனாமி விழிப்புணர்வு தினம் உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. |
| **நவம்பர் 07** | **பச்சிளம் குழந்தை பாதுகாப்பு தினம்** | பச்சிளம் குழந்தைகளின் உயிரைக் காப்பாற்றவும், போதிய பாதுகாப்பு மற்றும் பராமரிப்பை வழங்கவும் எடுக்க வேண்டிய நடவக்கைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்த தினம் அனுசரிக்கப்படுகிறது. |
| **நவம்பர் 07** | **தேசிய புற்றுநோய் விழிப்புணர்வு தினம்** | நோபல் பரிசு பெற்ற மேரி கியூரியின் பிறந்த நாளை ஒட்டி, |

| நாள் | தினம் | மையக் கருத்து |
|---|---|---|
| | | நவம்பர் 7ம் தேதி, 2014இல் அரசால் அறிவிக்கப்பட்டது. |
| **நவம்பர் 07** | **பச்சிளம் குழந்தைகள் பாதுகாப்பு தினம்** | புதிதாகப் பிறந்த உயிர்களின் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அவர்களுக்கு சரியான கவனிப்பை வழங்கவும் மட்டுமே இந்த நாள் கொண்டாடப்படுகிறது. |
| **நவம்பர் 08** | **உலக கதிரியக்க தினம்** | சர்வதேச கதிரியக்க தினம் 2022இன் கருப்பொருள், 'நோயாளிகளின் பாதுகாப்பில் முன்னணியில் இருக்கும் ரேடியோகிராபர்கள்' என்பதாகும் |
| **நவம்பர் 09** | **தேசிய சட்ட சேவைகள் தினம்** | 1995ஆம் ஆண்டு இதே நாளில் நடைமுறைக்கு வந்த 1987 ஆம் ஆண்டு சட்ட சேவைகள் அதிகார சபையின் தொடக்கத்தைக் கொண்டாடும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 9ஆம் தேதி தேசிய சட்ட சேவைகள் தினம் அனுசரிக்கப்படுகிறது. |
| **நவம்பர் 10** | **அமைதி மற்றும் வளர்ச்சிக்கான உலக அறிவியல் தினம்** | இந்த ஆண்டு அமைதி மற்றும் வளர்ச்சிக்கான உலக அறிவியல் தினத்தின் கருப்பொருள், 'நிலையான வளர்ச்சிக்கான அடிப்படை அறிவியல்' என்பதாகும். |
| **நவம்பர் 10** | **உலக பயன்பாட்டு தினம்** | 2022ஆம் ஆண்டின் மையக் கருத்தது, 'எங்கள் ஆரோக்கியம்' என்பதாகும். |
| **நவம்பர் 11** | **தேசிய கல்வி தினம்** | 2022ஆம் ஆண்டின் தேசிய கல்வி தினத்தின் கருப்பொருள், 'பாடத்தை மாற்றுதல், கல்வியை மாற்றுதல்' என்பதாகும். |
| **நவம்பர் 12** | **உலக நிமோனியா தினம்** | இந்த 2022ஆம் ஆண்டின் உலக நிமோனியா தின மையக் கருத்தானது உலகளாவிய நிமோனியா விழிப்புணர்வு பிரச்சாரத்தை அடிப்படையாகக் கொண்டது – 'நிமோலைட் 2022' ஒரு மையக் கருத்து மற்றும் முழக்கம் 'நிமோனியா அனைவரையும் பாதிக்கிறது'. |
| **நவம்பர் 12** | **பொது சேவை ஒளிபரப்பு நாள்** | 1947ஆம் ஆண்டு டெல்லியில் உள்ள அகில இந்திய வானொலி நிலையத்தின் ஸ்டுடியோவிற்கு மகாத்மா காந்தியின் ஒரே |

APTI STUDY CENTRE

| நாள் | தினம் | மையக் கருத்து |
|---|---|---|
| | | வருகையின் நினைவாக ஒவ்வொரு ஆண்டும் இந்த நாள் கொண்டாடப்படுகிறது. |
| **நவம்பர் 13** | **உலக கருணை தினம்** | இந்த ஆண்டு 'முடிந்தவரை அன்பாக இருங்கள்' என்ற மையக் கருத்துடன் இந்த தினம் அனுசரிக்கப்படுகிறது. |
| **நவம்பர் 14** | **உலக சர்க்கரை நோய் தினம்** | 2021 முதல் 2023 வரையிலான உலக நீரிழிவு தினத்தின் கருப்பொருள், 'நீரிழிவு பராமரிப்புக்கான அணுகல்' என்பதாகும். |
| **நவம்பர் 14** | **குழந்தைகள் தினம்** | இந்தியாவின் முதல் பிரதமர் பண்டிட் ஜவஹ்லால் நேருவின் பிறந்த நாளை நினைவுகூறும் வகையில் நவம்பர் 14ஆம் தேதி குழந்தைகள் தினத்தை இந்தியா கொண்டாடுகிறது. |
| **நவம்பர் 16** | **சகிப்புத் தன்மைக்கான சர்வதேச தினம்** | பல்வேறு கலாச்சாரங்களுக்கு இடையே சகிப்புத் தன்மையைக் கட்டியெழுப்பவும், சகிப்புத் தன்மை சமூகத்தின் ஒருங்கிணைந்த பகுதியாகும் என்ற செய்தியைப் பரப்புவதற்காகவும் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 16 அன்று சர்வதேச சகிப்புத் தன்மைக்கான தினம் அனுசரிக்கப்படுகிறது. |
| **நவம்பர் 16** | **தேசிய பத்திரிகை தினம்** | பிரஸ் கவுன்சில் ஆப் இந்தியாவை அங்கீகரித்து கௌரவிப்பதற்காக ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 16 அன்று தேசிய பத்திரிகை தினம் அனுசரிக்கப்படுகிறது. |
| **நவம்பர் 16** | **உலக சிஓபிடி தினம்** | உலக சிஓபிடி தினத்திற்கான 2022 ஆம் ஆண்டின் மையக் கருத்து, உங்கள் நுரையீரல் வாழ்க்கை' என்பதாகும். |
| **நவம்பர் 17** | **தேசிய வலிப்பு நோய் தினம்** | தேசிய கால்-கை வலிப்பு விழிப்புணர்வு மாதத்தின் மையக் கருத்து 2022, நான் இல்லாமல் National Epilepsy Awareness Month – NEAM (நீம்) இல்லை' என்பதாகும். |
| **நவம்பர் 17** | **உலக தத்துவ தினம்** | 2022 உலக தத்துவ தினத்தின் கருப்பொருள், 'எதிர்காலத்தின் மனிதன்' என்பதாகும். |
| **நவம்பர் 17** | **சர்வதேச மாணவர்** | ஒவ்வொரு மாணவரும் கல்வி |

| நாள் | தினம் | மையக் கருத்து |
|---|---|---|
| | தினம் | பெறுவதை உறுதி செய்வதற்காக ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 17ஆம் தேதி சர்வதேச மாணவர் தினமாக அனுசரிக்கப்படுகிறது. |
| நவம்பர் 18 | உலக குழந்தைகள் பாலியல் வன்கொடுமை தடுப்பு தினம் | குழந்தை பாலியல் துஷ்பிரயோகத்தின் அதிர்ச்சிக்கு உலகளாவிய பார்வையைக் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டதுதான் இந்த நாள். |
| நவம்பர் 18 | இயற்கை மருத்துவ தினம் | இந்த ஆண்டு நிகழ்வின் மையக் கருத்து, 'இயற்கை மருத்துவம்: ஒரு ஒருங்கிணைந்த மருத்துவம்' என்பதாகும். |
| நவம்பர் 19 | உலக கழிப்பறை தினம் | 2022இன் கருப்பொருள், 'கண்ணுக்குத் தெரியாததை காணக்கூடியதாக மாற்றுதல்' மற்றும் போதிய அளவு இல்லாத சுகாதார அமைப்புகள் மனித கழிவுகளை ஆறுகள், ஏரிகள் மற்றும் மண்ணில் பரப்பி, நிலத்தடி நீர் ஆதாரங்களை மாசுபடுத்துவது எப்படி என்பதை ஆராய்கிறது. |
| நவம்பர் 20 | உலக குழந்தைகள் தினம் | சர்வதேச குழந்தைகள் தினத்தின் கருப்பொருள், 'ஒவ்வொரு குழந்தையும் உள்ளடக்கம்' என்பதாகும். |
| நவம்பர் 21 | உலக தொலைக்காட்சி தினம் | இது நம் வாழ்வில் தொலைக்காட்சியின் மதிப்பையும் தாக்கத்தையும் அங்கீகரிக்கும் நாள் ஆகும். |
| நவம்பர் 21 | உலக மீன்பிடி தினம் | அனைத்து மீனவர்களுடன் ஒற்றுமையை வெளிப்பதும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 21ஆம் தேதி உலக மீன்பிடி தினமாகக் கொண்டாடப்படுகிறது. |
| நவம்பர் 24 | லச்சித் திவாஸ் | ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 24ஆம் தேதி லச்சித் திவாஸ் ஆனது, அஹோம் ஜெனரல் லச்சித் போர்புகானின் பிறந்த நாளாகக் கொண்டாடப்படுகிறது. |
| நவம்பர் 25 | பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் | 2022ஆம் ஆண்டின் மையக் கருத்து – ஒன்றுபடுங்கள். பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான செயல்பாடு ஆகும். |

| நாள் | தினம் | மையக் கருத்து |
|---|---|---|
| **நவம்பர் 26** | **தேசிய பால் தினம்** | வெண்மைப் புரட்சியின் தந்தை என்று அழைக்கப்படும் டாக்டர் வர்கீஸ் குரியன் பிறந்த நாளை இந்நாள் குறிப்பிடுகிறது. |
| **நவம்பர் 26** | **இந்திய அரசியலமைப்பு தினம்** | இந்திய அரசியலமைப்பு சட்டத்தை ஏற்றுக் கொண்டதை நினைவுகூறும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 26 அன்று இந்தியாவில் அரசியலமைப்பு தினம் கொண்டாடப்படுகிறது. |
| **நவம்பர் 27** | **தேசிய சாரண சாரணியர் தினம் (National Cadet Corps Day)** | என்சிசி கேடட்கள் நாட்டின் இரண்டாவது தற்காப்புக் குழுவாகவும் அறியப்படுகின்றனர். |
| **நவம்பர் 28** | **சிவப்பு கிரக தினம்** | செவ்வாய் கிரகத்திற்கான மிக முக்கியமான விண்வெளி பயணங்களில் ஒன்றான நாளை நினைவுகூறும். விண்கலம் நவம்பர் 28, 1964இல் ஏவப்பட்டு, ஜூலை 14, 1965இல் செவ்வாய் கிரகத்தை அடைந்தது. |
| **நவம்பர் 29** | **சர்வதேச ஜாகுவார் தினம்** | இது ஜாகுவார் 2030 அறிக்கையை உருவாக்கியது. இது சர்வதேச ஜாகுவார் தினத்தை உருவாக்கும் முன்மொழிவு உட்பட, சர்வதேச அளவில் ஒருங்கிணைந்த ஜாகுவார் பாதுகாப்பு முயற்சிகளைக் கோடிட்டுக் காட்டியது. |
| **நவம்பர் 29** | **பாலஸ்தீன மக்களுடன் சர்வதேச ஒற்றுமை தினம்** | அமைதியான பாலஸ்தீன -இஸ்ரேல் தீர்மானத்தை ஊக்குவிப்பதோடு, பாலஸ்தீன மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து அதிக விழிப்புணர்வைப் பரப்புவதையும் இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது. |
| **நவம்பர் 30** | **இரசாயனப் போரில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நினைவு தினம்** | இரசாயணப் போரினால் பாதிக்கப்பட்டவர்களை நினைவுகூறும் வகையில் ஐக்கிய நாடுகள் சபையால் சர்வதேச அளவில் குறிக்கப்பட்ட இந்த நாள் ஏற்றுக் கொள்ளப்பட்டது. |

# மற்றவை

➢ **2022 ஆம் ஆண்டின் சிறந்த சொல்**

✓ கேம்பிரிட்ஜ் அகராதி – 2022ஆம் ஆண்டின் சிறந்த சொல்லாக ‘ஹோமர்’ என்ற சொல்லை அறிவித்துள்ளது.

✓ கேம்பிரிட்ஜ் அகராதியின் இணைய தளத்தில் இந்த ஆண்டு ‘ஹோமர்’ என்ற சொல் 79,000 முறை தேடப்பட்டது. மே 5 அன்று 65,401 தேடல்கள் நடைபெற்றன.

✓ ஹோமர் என்பது ‘ஹோம் ரன்’ என்பதன் சுருக்கம் ஆகும். இது பேஸ்பாலில் அடித்த புள்ளியைக் குறிக்கும்.

➢ **கேஸ் லைட்டிங் (Gaslighting)**

✓ ‘கேஸ்லைட்டிங்’ என்ற சொல் - மனதைக் கையாளுதல், மிகவும் தவறாக வழிநடத்துதல், முற்றிலும் ஏமாற்றுதல் ஆகியவற்றைக் குறிக்கிறது - இந்த ஆண்டின் மெரியம் - வெப்ஸ்டரின் சிறந்த சொல்லாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

✓ merriam-webster. com இல் இந்த சொல்லுக்கான தேடல் முந்தைய ஆண்டை விட 2022இல் 1.740 விழுக்காடு அதிகரித்துள்ளது.

✓ மெரியம் - வெப்ஸ்டரின் கேஸ்லைட்டிங்கிற்கான சிறந்த வரையறை, ஒரு நபரை உளவியல் ரீதியாகக் கையாளுதல் ஆகும். இது பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் சொந்த எண்ணங்களின் நம்பகத்தன்மையையே கேள்விக்குறியாக்குகிறார்கள்.

APOLLO STUDY CENTRE